பக்கங்கள்: 20 விலை:20 ரூபா


வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நாடுங்கள்
சன்சிகா நகைமாடம்
இல.114, பஸார் வீதி, வவுனியா.
தொலைபேசி: 024 222 4028

# காலைக்கதிர்
Kalaikkathir

விழுயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 08, வெள்ளிக்கிழமை 21.04.2017 | கதிர் 166

## காக்கை வன்னியனைப் போல
# சுயநலச் சிந்தனையினால் நம்மில் சிலர் சதி வேலை; அதனால் பேரழிவு நேரும்!
## நேற்று பண்டாரவன்னியன் சிலையை திறந்து வைத்து விக்கி எச்சரிக்கை

முல்லைத்தீவு, ஏப்ரல் 21

**"எமது வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமையுடன் எமது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நாம் முன்வர வேண்டும். காக்கை வன்னியன் போல் சுயநல சிந்தையுடன் சதி வேலைகளில் எம்மில் சிலர் ஈடுபடுவது முழுத் தமிழர் சமுதாயத்தையும் அழித்துவிடும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது."**

**- இவ்வாறு எச்சரித்திருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர், நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன்.**

முல்லைத்தீவில் பண்டாரவன்னியன் சிலையை நேற்றுத் திறந்து வைத்த பின்னர், அங்கு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு :-

பக்கம் 18 >>>



## சுன்னாகத்தில் வைத்தியரின் வீடுமீது பெற்றோல் குண்டு வீச்சு

சுன்னாகத்தில் தனியார் வைத்தியசாலை வைத்தியர் ஒருவரின் வீட்டின் மீது பெற்றோல் குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் உடுவில்

பக்கம் 18 >>>

## அமைச்சரவை மாற்றம் வெசாக்கிற்கு முன்?

கொழும்பு, ஏப்.21

பத்திரிகை ஆசிரியர்களை நேற்றுக் கொழும்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தித்த சமயம், "அமைச்சரவை மாற்றம் வருமா?" என்று அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

பக்கம் 18 >>>

## அளப்பு அருணாசலம்



அப்ப... குப்பை விவகாரம் கொழுந்து விட்டு எரியுது எண்டு சொல்லுங்கோ...!

## குப்பை அகற்றும் பணி அத்தியாவசிய சேவை: நேற்றுப் பிரகடனம்

கொழும்பு, ஏப்.21

ஜனாதிபதியின் உத்தரவின் படி அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களிலும் கழிவகற்றல் சேவை அத்தியாவசிய சேவையாக விசேட வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பக்கம் 18 >>>

## குப்பைமேடு சரிந்த அனர்த்தம் குறித்து விசாரிக்கக் குழு

கொழும்பு,ஏப்.21

மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்து ஏற்பட்ட அனர்த்தம் குறித்து விசாரிப்பதற்காக ஓய்வு பெற்ற நீதியரசர் ஒருவர் தலைமையில் அடுத்த வாரத்தில் ஒரு

பக்கம் 18 >>>

## எதிர்ப்பில் ஈடுபட்டோர் கண்ணீர்ப் புகைக்குண்டு வீசிக் கலைக்கப்பட்டனர்

கம்பஹா மாவட்டம், தொம்பே - மாளிகாவத்த பிரதேசத்தில் குப்பைகள் கொட்டப்படும் இடத்தில் எதிர்ப்பில் ஈடுபட்டவர்களை கலைக்கப் பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுத் தாக்குதல் நடத்

பக்கம் 18 >>>

## புதிய அரசமைப்பு உருவாக்கம்
# இடைக்கால அறிக்கை 2 வாரங்களில் அமைச்சரவைக்கு என்கிறார் ஜனாதிபதி!

கொழும்பு, ஏப். 21

★ அரசமைப்பு வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கை இன்னமும் இரண்டு வாரங்களில் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படும்.

★ அந்த அறிக்கை கிடைக்கப் பெற்றதும் அதில் திருத்தங்களை மேற்கொள்வதா அல்லது அதனை அவ்வாறே நடைமுறைப்படுத்துவதா என்பது குறித்துத் தீர்மானிக்கப்படும்.

- இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

கொழும்பில் ஊடகத் தலைவர்கள் மற்றும் பத்திரிகை ஆசி

பக்கம் 18 >>>



## வடக்கில் மீள்குடியேற்றம் 3மாதங்களில் பூர்த்தியாம்!
### ஜனாதிபதியின் நம்பிக்கை இது

கொழும்பு, ஏப். 21

வடக்கில் 60 வீதமான மீள் குடியேற்ற நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளன என்று நேற்றுத் தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்வரும் மூன்று மாத காலத்தினுள் அதனை முழுமையாகப் பூர்த்தி செய்வதைத் தாம் எதிர்பார்த்திருக்கின்றார் என்றும் கூறியுள்ளார்.

பக்கம் 18 >>>

## அரச நிர்வாகக் கட்டமைப்பில் அதிரடி மாற்றங்கள் நடக்கும்?

கொழும்பு, ஏப்.21

அரச நிறுவனக் கட்டமைப்புகளிலும், பதவிகளிலும் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் பாரிய மாற்றங்கள் செய்யப்படும் என்ற தகவலை நேற்று பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பின் போது ஜனாதிபதி சிறிசேன கோடி காட்டினார்.

அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை வினைத் திறன்மிக்கவையாக மாற்றுவதற்காகவே இந்த நடவடிக்கை என்று

பக்கம் 18 >>>

# காணிகளை விடுவிப்பதில் இராணுவம் ஈடுபாடு காட்டுவதாகத் தோன்றுகிறது
### கிளிநொச்சிக் கூட்டத்தின் பின்னர் சுமந்திரன் நம்பிக்கை



இராணுவத்தினரும் காணிகளை விடுவிக்கும் நோக்கத்தோடு செயற்படுகிறார்கள் போல் தெரிகிறது. ஆகவே கலந்துரையாடல்கள் மூலம் நாங்கள் முன்நகரலாம். படிப்படியாகவேனும் காணிகள் விடுவிக்கப்படும் என்று தென்படுகிறது என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் முப்படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுமக்கள் மற்றும் திணைக்களங்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவித்தல் தொடர்பிலான மாவட்ட

பக்கம் 03 >>>

## பாதுகாப்பற்ற கடவையில் நேற்று ரயில் மோதி ஒருவர் உயிரிழப்பு!
### வவுனியா - கொக்குவெளியில் சம்பவம்

வவுனியா, ஏப்.21

வவுனியா - கொக்குவெளிப் பகுதியில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவை ஊடாக மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவர் ரயிலில் மோதியதில் சம்பவ இடத்திலேயே பலியானார். அந்த மோட்டார் சைக்கிளில் இருவர் பயணித்த நிலையில், ஒருவர் மோட்டார் சைக்கிளில் இருந்து குதித்து உயிர்தப்பியுள்ளார்.

நேற்று மதியம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வவுனியா பண்டாரிக்குளத்தைச் சேர்ந்த

பக்கம் 18 >>>

காலைக்கதிர் Kalaikkathir



# யாழ். மாநகரசபை எல்லைக்குள் பொலித்தீன் பாவனைக்குத் தடை

யாழ்ப்பாணம், ஏப்.21

யாழ். மாநகர சபை எல்லைக்குள் பொலித்தீன் பாவனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்துள்ளார்.

நாளை 22 ஆம் திகதி பூமி தினமாகும். இந்தத் தினத்தில் இருந்து இது நடைமுறைக்கு வரும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

வடக்கு மாகாண சபை எடுத்துக் கொண்ட தீர்மானத்துக்கு அமைய யாழ்ப்பாண மாநகர சபையின் சூழல் நேய நடவடிக்கைகளுக்கு வலுச் சேர்க்கும் வகையில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படுகிறது.

அரச நிறுவனங்கள், பாடசாலைகளில் பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருள்களின் பாவனை முற்றாகத் தடை செய்யப்பட வேண்டும்.

உணவகங்களிலும், திருமண மண்டபங்களிலும் இவற்றின் பாவனையை இல்லாது ஒழித்து இந்த நடவடிக்கைக்கு வலுச் சேர்க்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நாளாந்த பாவனையின் பின்னர் கழிவாக வீசப்படும் பொலித்தீன், பிளாஸ்ரிக் பெருமளவில் திரண்டு, மாநகர கழிவகற்றலில் சவால்களை



யும் சூழலுக்குப் பெரும் தீங்கையும் ஏற்படுத்துகின்றன.

உணவுச்சாலைகள் மற்றும் கல்யாண மண்டபங்கள் தங்கள் வியாபார நடவடிக்கையின்போது சாப்பாட்டுத் தட்டங்களை கொதி நீரில் கழுவி, சுத்தமான தட்டங்களில் வாழை இலைகளை இட்டு, சுத்தமான கண்ணாடி அல்லது சில்வர் குவளைகளை பாவிக்கலாம். மினரல் தண்ணீரை பெரிய கொள்கலனில் வாங்கிப் பயன்படுத்தலாம்.

தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் ஒரு நாள் கட

**பூமி தினமான நாளை முதல் நடைமுறைக்கு!**

தாசிக் குவளைகளை, உணவுப் பொதி இடுகையில் வாழை இலைகளை, சுத்தமான சில்வர் குவளைகளைப் பயன்படுத்தலாம்.

பூமி தினத்தில் தடை செய்யப்படும் பொலித்தீன், பிளாஸ்ரிக் கழிவுகள் தங்கள் இடங்களில் சேரும் திண்மக் கழிவுகளில் காணப்படுமாயின் யாழ். மாநகர பொது சுகாதார பொறியியல் பிரிவினரால் குறித்த இடத்தில் கழிவகற்றல் சேவை நிறுத்தப்படும்.

பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளை எரிப்பதால் உண்டாகும் விளைவுகள் மனிதனுக்குத் தீங்கை ஏற்படுத்தும்.

மாநகர எல்லையினுள் குப்பைகளை எரியூட்டுதல் தவிர்க்கப்பட வேண்டும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறோம்.- என்று கூறியுள்ளார். (ஐ)

## கழிவகற்றல் யோசனைக்கு கொழும்பில் விசேட குழு

கொழும்பு, ஏப்.21

கொழும்பில் கழிவகற்றல் முகாமைத்துவம் செய்வதற்கான யோசனைகளை முன்வைப்பதற்காகப் பிரதமரால் அமைச்சுக்களுக்கு இடையிலான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், சுற்றாடல், அனர்த்த முகாமைத்துவம், மேல் மாகாண மற்றும் மாநகர அபிவிருத்தி ஆகிய அமைச்சுக்களின் செயலாளர்கள் பெயரிடப்பட்டுள்ளனர்.

30 நாள்களுக்குள் கழிவகற்றல் முகாமைத்துவத்துக்கான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பிரதமர் இந்தக் குழுவுக்கு அறிவித்துள்ளார் என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் செயலாளர் கமல் பத்மசிறி குறிப்பிட்டார்.

இதற்கமைய குப்பைகளை வகைப்படுத்தல், மீள்சுழற்சி மற்றும் கொழும்பில் குப்பைகள் சேருவதால் கழிவுகள் நிலத்தில் படிவதைத் தடுப்பதற்கான முறைமை உள்ளிட்ட பல்வேறு யோசனைகளை இந்தக் குழு, பிரதமரிடம் சமர்ப்பிக்கவுள்ளது என்று அமைச்சின் செயலாளர் கூறினார்.

இது தொடர்பான அறிக்கை பிரதமரிடம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் செயலாளர் கமல் பத்மசிறி மேலும் குறிப்பிட்டார். (ஐ)

## மாணிக்கக்கல் வர்த்தகம் செய்யும் வெளிநாட்டவர்கள் கைதாவர்!

கொழும்பு, ஏப்.21

சுற்றுலா விசா மூலம் நாட்டுக்கு வருகைதந்து மாணிக்கக்கல் வர்த்தகத்தில் ஈடுபடும் வெளிநாட்டவர்களை கைது செய்வதற்கு பாதுகாப்புத் தரப்பினருடன் இணைந்து விசேட திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபை தெரிவித்துள்ளது.

**இரத்தினக்கல் அதிகார சபைத் தலைவர் தெரிவிப்பு**

சுற்றுலா விசா மூலம் வருகைதந்து மாணிக்கக்கல் வர்த்தகத்தில் ஈடுபடும் வெளிநாட்டவர்கள் தொடர்பில் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபையின் தலைவர் அசங்க வெலகெதர கூறினார்.

இதேவேளை மாணிக்கக்கல் அகழ்வு மேற்கொள்ளப்படும் இடங்களில் இடம்பெறும் அனர்த்தங்களைக் கட்டுப்படுத்துவதற்காக புதிய தொழில்நுட்ப வழிமுறைகளைப் பயன்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## பயன்படுத்த முடியாத நிலையில் இ.போ.சவிடம் 500 பேருந்துகள்

கொழும்பு,ஏப்.21

இலங்கை போக்குவரத்துச் சபையிடம் காணப்படும் 5 ஆயிரத்து 500 பேருந்துகளில் சுமார் 500 பேருந்துகள் போக்குவரத்தில் ஈடுபடுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றன என்று இலங்கைப் போக்குவரத்துத் தொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் அரச போக்குவரத்து சேவையான இலங்கை போக்குவரத்துச் சபை பெரும் நஷ்டத்துக்கு முகம் கொடுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைக் கவனத்தில் கொண்டு இலங்கை போக்குவரத்து சபைக்கு தேவையான பேருந்துகளைப் பெற்றுத் தருமாறு, இந்தச் சங்கம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது என்று இந்தச் சங்கத்தின் பிரதான செயலாளர் சேபால லியனகே தெரிவித்துள்ளார்.

சிறந்த போக்குவரத்தை முன்னெடுக்க இலங்கை போக்குவரத்து சபைக்கு இன்னும் 10 ஆயிரம் பேருந்துகள் தேவைப்படுகின்றன என்று அண்மையில் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார் என்று அனைத்து இலங்கை போக்குவரத்துத் தொழிலாளர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

## முகமாலை மேற்கில் ஆயுதங்கள் மீட்பு!





கிளிநொச்சி, ஏப்.21

முகமாலை மேற்குப் பகுதியில் இருந்து ஒரு தொகை ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கண்ணிவெடி அகற்றும் டாஸ் நிறுவனத்தால் துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆயுதங்கள் மண்ணுக்குள் புதைக்கப்பட்ட நிலையில் பாவனைக்கு உதவாத வகையில் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஐ)

## உயிரச்சுறுத்தல் என்று ரயில் கடவை ஊழியர் மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

வவுனியா ரயில் கடவை காப்பாளர்கள், தங்களுக்கு பொலிஸாரால் உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

அத்துடன் வவுனியா மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்தப் போராட்டம் வடக்கு, கிழக்கு ரயில் கடவை காப்பாளர் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.ஜே. றொகான் ராஜ்குமார் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்ட வடக்கு, கிழக்கு புகையிரதக் கடவை காப்பாளர் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.ஜே. றொகான் ராஜ்குமார் கருத்துத் தெரிவிக்கையில் -

இலங்கை முழுவதும் 3 ஆயிரத்து 500 ஊழியர்களும் வடமாகாணத்தில் 450 ஊழியர்களும் ரயில் கடவைக் காப்பாளர்களாகக் கடந்த நான்கு வருடங்களாக பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் நாளொன்றுக்கு 250 ரூபா கூலிக்கு கடமையாற்றிவருகின்றனர்.

இந்த நிலையில், ரயில் கடவைக் காப்பாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கடந்த 10 ஆம் திகதி முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளோம். வவுனியா மாவட்டத்தில் எங்களுக்குப் பொறுப்பாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரே உள்ளார்.

அதனால் நாங்கள் பொலிஸ் மா அதிபர் ஊடாக ஜனாதிபதியை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தரும்படி கோரியிருந்தோம். ஆனால் பொலிஸார் வீடு வீடாக வந்து எங்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கின்றனர்.

எங்களுக்கும் மக்களுக்கும் பாதுகாப்பாக இருக்க வேண்டிய பொலிஸார் எம்மை "காணாமற்போய் விடுவீர்கள்" என்று மிரட்டுகின்றனர். எமக்கோ அல்லது எமது குடும்பத்திற்கோ ஏதாவது அநியாயம் நடந்தால் அதற்கு பொலிஸாரே காரணம். நாம் வேலையை நிரந்தரமாக்க கோருவது தப்பா...?.-என்று தெரிவித்தார். (ஐ-100)

காலைக்கதிர்
Kalaikkathir



# வெப்பநிலை அதிகரிப்பு ஆபத்தானது சிறுவர், முதியோர் அவதானம் தேவை

## நிலைமையை விளக்குகிறார் வைத்தியர் யமுனானந்தா

(எஸ்.நிதர்ஷன்)

நாட்டில் அதிகரித்துள்ள வெப்பத்தால் பக்றீரியா மற்றும் வைரஸ்பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் நோய்கள்பரவக்கூடிய அபாயம் உள்ளது என யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுப் பொறுப்பதிகாரி வைத்திய அதிகாரி எஸ். யமுனானந்தா தெரிவித்துள்ளார்.

மேற்படி நோய்க் கிருமிகளின் பெருக்கத்தால் ஆஸ்மா, கண் தொடர்பான நோய்கள் ஏற்படக்கூடும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். இந்த நோய்கள் தொடர்பாகப் பொதுமக்கள் அவதானமாக இருக்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் –

வெப்பநிலை அதிகரிக்கும் போது பக்றீரியா பெருக்கமும், வைரஸ் பெருக்கமும் காணப்படும். அத்துடன் இக்காலப்பகுதியில் சுவாசம் தொடர்பான நோய்கள் மற்றும் தூசிகளால் ஏற்படக்கூடிய நோய்கள் போன்றன தொடர்பாக மக்கள் அவதானமாக இருக்கவேண்டும்.

முடியுமான அளவு காலை 11 மணியில் இருந்து பிற்பகல் 3 மணிவரை வெயில் சூழலில் செல்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக, சிறுவர்களும், முதியவர்களும் மிக அவதானமாக இருக்க வேண்டும்.

வெப்பத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை தவிர்ப்பதற்கு ஒருவர் நாளொன்றுக்கு சராசரியாக 2 தொடக்கம் 3 லீற்றருக்கும் அதிகமான நீரை அருந்த வேண்டும்.

மேலும், நீர்த்தன்மை நிறைந்த உணவுகளை உட்கொள்ளவேண்டும். குறிப்பாக பழவகைகள், கூழ், கஞ்சி, மரக்கறிகள் போன்றவற்றை உணவில்சேர்த்துக்கொள்வதனூடாக இவ்வெப்பத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும். – என அவர் தெரிவித்தார். (ம)

# வவுனியா சிறையில் இருந்த கைதி சுகவீனத்தால் மரணம்!

வவுனியா, ஏப். 21

வவுனியா சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் நோய் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், நேற்று அங்கு உயிரிழந்தார். கொழும்பு மருதானையைச் சேர்ந்த நிசாந்த் (வயது 45) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் குற்றச்சாட்டு ஒன்றின் பேரில் வவுனியாப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கு அமைய வவுனியா சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், உடல் சுகவீனம் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபயனின்றி அங்கு அவர் உயிரிழந்தார்.

இறந்தவரின் சடலம் நேற்று மதியம் வரை வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது. பிரேத பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என வவுனியா வைத்தியசாலைப் பணிப்பாளர் கு.அகிலேந்திரன்நேற்றுமதியம் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-100)

# தகவல் அறியும் சட்டம் தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினருக்கு விளக்கம்

## நேற்று பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றது



தகவல் அறியும் சட்டம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் முக்கியஸ்தர்கள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளைத் தெளிவுபடுத்தும் விசேட செயலமர்வு பாதுகாப்பு அமைச்சில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட, 2016 ஆம் ஆண்டு இலக்கம் 12 தகவல்களை அறியும் சட்டம் (RTI No 12 of 2016) தொடர்பாக அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ரங்க கலன்சூரிய, தேசிய ஊடக கேந்திர நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் சட்டத்தரணி ஜெயகத் லியன ஆராய்ச்சி ஆகியோர் அங்கு உரைநிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள், முப்படையைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ம)

# பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு 20 ஆயிரம் பசு மாடுகள் இறக்குமதி

## பண்ணையாளர்களுக்கு மானிய விலையில் விற்பனை

தேசிய ரீதியில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் 20 ஆயிரம் பசுமாடுகளை இறக்குமதிசெய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

முதற்கட்டமாக நியூசிலாந்தில் இருந்து 2 ஆயிரம் மாடுகள் இறக்குமதிசெய்யப்படவுள்ளன. அந்த மாடுகள் எதிர்வரும் மே மாதம் 17 ஆம் திகதி இலங்கையை வந்தடையும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இறக்குமதி செய்யப்படும் உயர்தர பசு மாடுகள் வணிக ரீதியாக பண்ணைகளை நடத்தும் பால் உற்பத்தியாளர்களுக்கு மானிய விலையில் விற்பனை செய்யப்பட உள்ளன. இதற்கு தேவையான மானியக் கடன் வசதிகள் இலங்கை வங்கியின் ஊடாக வழங்கப்பட உள்ளன.

இதனைத் தவிர நவீன பால் பண்ணைகளை ஏற்படுத்தவும் அதன் பணிகளை முன்னெடுக்கவும் விலங்கு உணவு உற்பத்தி மற்றும்சுகாதாரத்திணைக்களம் பயனாளிகளுக்கு பயிற்சிகளை வழங்க உள்ளது. அத்துடன், கால்நடை சுகாதார வசதிகளை வழங்க உத்தேசித்துள்ளது.

முதல் கட்டமாக பயனாளிகளான பால் உற்பத்தியாளர்கள் தெரிவு' செய்யப்பட்டு அவர்களின் பண்ணைகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக அவுஸ்திரேலிய நிறுவனமான Wellard நிறுவனம் நியூசிலாந்தில் இருந்து 2 ஆயிரம் பசு மாடுகளை இலங்கைக்கு ஏற்றுமதி செய்ய உள்ளது. (ம)

# பெண்கள், சிறுவர்களைப் பாதுகாக்க புதிய திட்டம் இன்று அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஏப்.21

வன்முறைகளில் பாதிக்கப்படுகின்ற பெண்கள், சிறுவர்களைப்பாதுகாத்துசமூகத்துடன் மீளிணைக்கும் செயற்றிட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

பெண்கள், சிறுவர்கள் விவகார அமைச்சு யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் நம்பிக்கை இல்லத்துடன் இணைந்து இச்செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளது. ஆரம்ப நிகழ்வு இன்று முற்பகல் 9.30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள ரில்கோ விருந்தினர்விடுதியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பெண்கள், சிறுவர் விவகார அமைச்சின் உதவிச்செயலாளர் திருமதி அசோகா அளவத்தை மற்றும் தற்போது நிதிப்பங்களிப்பினை மேற்கொண்டுவருகின்ற சுவிஸ்லாந்து தூதுவரக பிரதித் துணைத் தூவர் mrs. stephained perillard, தேசிய நிகழ்ச்சித் திட்ட அலுவலர் செல்வி துஷாந்தி கோபால கிருஸ்ணன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-07)

# புங்குடுதீவில் பரிசளிப்பு விழா

புங்குடுதீவு, ஏப்.21

புங்குடுதீவு, பாணாவிடைச் சிவன் தேவஸ்தானத்தில் தெய்வத்திரு சிவக்கன்று மருதப்பு சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்டு 105 ஆவது வருடமாக நடத்தப்பட்டுவரும் திருநாவுக்கரசு நாயனாரின் குருபூசைத் தினத்தை முன்னிட்டு, புங்குடுதீவுப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட சைவசமய அறிவுப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு புங்குடுதீவு திருநாவுக்கரசு நாயனார் மடத்தில் நடைபெறவுள்ளது.

புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் தேவஸ்தானத் தலைவர் எஸ்.கே.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதமவிருந்தினராக யாழ்.மாவட்டமேலதிகஅரசாங்க அதிபர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் கலந்து கொள்வார்.

ஆசியுரையை தேவஸ்தான குரு இரா. இராஜரூபசர்மாவும், வரவேற்புரையை இராஜகோபுரத் திருப்பணிச்சபைத்தலைவர் பொன். வைரமுத்துவும், வாழ்த்துரையை புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலய ஓய்வு நிலை அதிபர் நா.பஞ்சலிங்கமும், நன்றியுரையை நயினை ஸ்ரீ கணேச கனிஷ்ட மகாவித்தியாலய அதிபர் சி. சிவேந்திரனும் வழங்குவர். கிராமத்தின் முதியோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம் பெறும். (உ)

# காணிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்மட்டக் கலந்துரையாடல் நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்றது.

கூட்டத்தின் நிறைவில் ஊடகவியலாளர்களுக்குகருத்துதெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

“இராணுவத்தினர் தனியார் காணிகளை விடுப்பதுதான் தங்களது முதல் நோக்கம் எனத் தீர்மானித்து அறிவித்திருக்கின்றார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்திலே இருக்கின்ற ஒரேயொரு பிரச்சினை என நாம் அடையாளம் கண்டிருப்பது என்னவென்றால் அரச அதிகாரிகள் தனியார் காணிகள் என்று அடையாளப்படுத்திய பல காணிகளை இராணுவத்தினர் அரச காணிகள் என்றுநினைத்திருக்கின்றார்கள்.

இவை தொடர்பில் காணி சுவீகரிப்பு நடவடிக்கை ஆரம்பமாகியிருக்கிறது. ஆனால்முடிவுக்குக் கொண்டுவரப்படவில்லை. ஆரம்பமாகியவுடனே அது அரச காணி என்று அவர்கள் நினைத்துவிட்டார்கள்.

நாங்கள் விளக்கம் கொடுத்த பின் அந்தக் காணிகள் தொடர்பிலும் அவர்கள் குறித்து செல்கின்றார்கள்.

அந்தக் காணிகளும் தனியார் காணிகள் என்று உறுதிப்படுத்தினால் அவற்றையும் விடுவிக்கும் நடவடிக்கையை எடுப்பார்கள் எனச்சொல்லியிருக்கின்றார்கள்.

அதைவிட அரச காணிகளிலும் கூடப் பொதுமக்களின் தேவைக்காக இருக்கின்ற பல பிரதேசங்கள் அடையாளப்படுத்தப்பட்டன.

அப்படியான ஒரு விண்ணப்பம் கொடுக்கப்படுமாக இருந்தால் அதனையும் நிரற்படுத்தி முன்னுரிமை அடிப்படையில் விடுவிக்க நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

அவர்கள் ஒரு இடத்தில் கட்டடங்கள் அமைத்து இருக்கின்ற நிலையில் இன்னொரு இடத்துக்கு மாறுகின்ற போது கட்டடங்கள் அமைத்த செலவுகள் உண்டு.

அரசு அந்தச் செலவுகளை வழங்குகின்ற பட்சத்தில் தாங்கள் உடனடியாக அந்த இடங்களை விட்டுச் செல்லலாம் என்கின்றார்கள்.

கடந்த இரு நாள்களாகவும் அதற்கு முன்னரும் நடத்திய கலந்துரையாடல்களில் இருந்து இது இப்போது புலனாகிறது.

இராணுவம்ஓரிடத்தில்இருந்து இன்னோர் இடத்திற்கு மாறுகின்ற போது அதன் செலவு பெரியதொரு தடையாக இருக்கிறது.

ஆகவே நாங்கள் இது குறித்தும் அரசோடு பேசி ஏதோ ஒரு விதமாக நல்லிணகத்தின் அடிப்படையில், ஒரு படிமுறையாக எங்காவது இருந்து பணத்தைஇதற்காகவிசேடமாகப் பெற்றுக் கொடுத்தால் கூட இராணுவம் இடங்களை விடு வதற்கு தயாராக இருக்கின்றது.

எனவே அந்த நடவடிக்கைகளையும் நாங்கள் தொடர்ச்சியாக எடுப்போம். நாங்கள் கேட்காத ஒரு விடயத்தை இராணுவத்தினர் சொன்னார்கள்.

அதாவது இரணைமடுவை சுற்றியுள்ள 2439 ஏக்கர் நிலத்தை விடுப்பதாக சொன்னார்கள். அது முல்லைத்தீவு மாவட்டம் என்பதால் கிளிநொச்சிக் கூட்டத்தில் எடுக்கவில்லை.

ஆனால் அந்தக் காணிகள் அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருப்பதாக அறிவித்தார்கள். அதனைத் தவிர உறுதியாக இப்போது எனக்கு சரியான தகவல்கள் சொல்ல முடியாது.

ஆனால் இன்னொன்றைச் சொன்னார்கள். தங்களின் கட்டுப்பாட்டில் 24,000 ஏக்கர் இருந்ததாகவும், ஆனால் தற்போது 783 ஏக்கர் தான் தற்போது தங்களின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும், அதைப்படிப்படியாகத் தாங்கள் விடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் குறிப்பிட்டார்கள்.

அண்ணளவாக நூறு ஏக்கர் உடனடியாக விடுவிக்கப்படக் கூடிய நிலையில் இருக்கிறது.– எனச் சுமந்திரன் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சி.சிறீதரன், மாகாணசபைஉறுப்பினர் பசுபதிபிள்ளை மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் சமந்தி வீரசிங்க, பிரதேச செயலாளர்கள் மற்றும் காணி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (உ)

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

# மீதொட்டமுல்ல அழிவுகளும் முள்ளிவாய்க்கால் இழப்புகளும்

"மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்து விழுந்ததில் ஏற்பட்ட மரணங்களுக்குப் பொறுப்புக் கூற நாம் கடமைப்பட்டுள்ளோம்." - என்று குறிப்பிட்டு, அந்த மரணங்களுக்கான பொறுப்பை அரசின் சார்பில் ஏற்றுக் கொண்டிருக்கின்றார் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

ஒரு நாட்டின் உயர் தலைவர்களுள் ஒருவர் என்ற முறையில் அவரது இந்தப் பொறுப்பேற்பு - பொறுப்புக் கூறல் - பாராட்டத்தக்கதே அதனை வரவேற்கின்றோம்.

ஆனாலும், அந்தப் பொறுப்புக் கூறலையும் கூட தமக்கேயுரிய ஓரவஞ்சனையுடன்தான் தென்னிலங்கைத் தலைமை மேற்கொள்கின்றது என்பதே இலங்கைத் தமிழர்களின் வேதனையாக இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிவு ஒரு தேசிய அனர்த்தம். அதில் பாதிப்புற்றவர்கள், உயிரிழந்தவர்கள் எந்த இனத்தைச் சார்ந்தவர்களாயினும் - எந்த மதத்தைச் சார்ந்தவர்களாயினும் - எந்த மொழியைப் பேசுபவர்களாயினும் - அவர்கள் அனைவரும் நமது சகோதரர்களே. அவர்களின் பாதிப்புக்காக நாங்கள் அனைவரும் கழிவிரக்கம் கொண்டு அவர்களுக்காக இறைஞ்சுகின்றோம். அதில் மாற்று நிலைப்பாடு இல்லை.

மீதொட்டமுல்லவில் உயிரிழந்தோருக்காக சாவகச்சேரியிலும், வவுனியாவிலும் கூட நினைவு வணக்கம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் ஐம்பதுக்கும் உட்பட்ட எண்ணிக்கையானோரே உயிரிழந்தனர் அல்லது காணாமற் போயினர்.

வெளிநாடு சென்றிருந்த இலங்கைப் பிரதமர் இந்தச் சம்பவம் பற்றிக் கேள்விப்பட்டதும், தமது வியட்நாம் விஜயத்தை இடைநடுவில் சுருக்கிக் கொண்டு அவசர அவசரமாக நாடு திரும்பினார். நேரடியாக மீதொட்டமுல்லவுக்குச் சென்று பாதிப்புகளைப் பார்வையிட்டார். பாதிப்புற்றோரைச் சந்தித்தார். நிவாரண நடவடிக்கைகளை முடுக்கி விட்டார். உயிரிழப்புகளுக்குப் பொறுப்பேற்று அறிக்கை விடுத்தார். இந்த அனர்த்தத்தில் உயிரிழந்தோருக்கு மாற்று வீடுகளை உடனடியாக வழங்க உத்தரவிட்டார். 98 குடும்பங்களுக்கு உடனடியாகப் புதிய மாற்றுவீடுகள் கிடைக்கவுள்ளன. நல்லது. வரவேற்கின்றோம்.

ஆனால், மீதொட்டமுல்ல போன்று பல நூறு மடங்குகள் மோசமான அனர்த்தத்தை முள்ளிவாய்க்கால் கொடூரத்தில் சந்தித்த தமிழினம், இன்னும் உரிய நிவாரணப் பணிகள் வழங்கப்படாமல் துவண்டு கிடக்கின்றது. அதைக் கவனிப்பார் யாருமில்லை.

மீதொட்டமுல்லவில் இயற்கை விளைவு அனர்த்த வடிவத்தில் பாதிப்பை ஏற்படுத்தியது.

ஆனால், முள்ளிவாய்க்கால் வரையான தமிழரின் பேரழிவு இந்த நாட்டின் - சட்டரீதியான, இறையாண்மையுள்ள தரப்பு என்று தன்னைக் கூறிக் கொள்ளும் - அரசினால், அதன் படைகளினாலேயே தான் முன்னெடுக்கப்பட்டது.

மீதொட்டமுல்லவில் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கையைப் போல பல நூறு மடங்கானோர், தமது நாட்டின் ஆயுதப் படைகளின் நடவடிக்கைகளினாலேயே உயிரிழந்தார்கள். அதேபோல பல நூறு மடங்கினர் படுகாயமடைந்தனர். பல நூறு மடங்கினர் காணாமல் போயினர். பல நூறு மடங்கினர் வீடு, வாசல்கள், குடியிருப்புகள், சொத்துகளை இழந்து ஏதிலியானார்கள்.

ஆனால், இந்தப் படுகொலைக் கொடூரங்களுக்கு எந்த அரசுமோ, அரசுத் தலைவருமோ பொறுப்பேற்கவில்லை.

மீதொட்டமுல்லவில் அளிக்கப்படுகின்றமை போல இவ்வளவு விரைவாக மாற்று வீடுகள் அந்த மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப் படவில்லை.

அரசுப் படையால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் தமது வீடு, வாசல்கள், நிலபுலங்களை விடுவிக்கக் கோரி அவர்கள் வீதிகளில் நின்று போராடும் அவலமே, இப்போதும் தொடர்கின்றது.

இதுதான் இலங்கையின் அரசியல் கள யதார்த்தம்.

மீதொட்டமுல்லவில் பாதிக்கப்பட்ட நமது சகோதரர்களுக்காக மேற்கொள்ளப்படும் - காட்டப்படும் - அவசர மீட்புப் பணிகள், நிவாரண நடவடிக்கைகளை நாம் தவறு என்று சொல்லவில்லை. அவை அவசரமும், அவசியமும் மிக்கவை என்பதில் மாற்றுக் கருத்து எதற்குமே இடமே இல்லை.

ஆனால், அதிலும் விட மோசமான பாதிப்புகளை எதிர்கொண்ட வடக்கு, கிழக்குத் தமிழர்கள் வீதிகளிலும், பொது இடங்களிலும் போராட்டம் நடத்திப் பொசுங்கிக் கொண்டிருக்கையில், அவர்களையும் சேர்த்துக் கவனிக்க வேண்டும். அதே முக்கியத்துவம் அவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் - என்பதே எமது வற்புறுத்தலும் வேண்டுகையும் ஆகும்.

பொறுப்புக் கூறல் விடயம் குப்பை மேட்டுச் சரிவுக்கு மாத்திரமானதல்ல. தனது படைகளைக் கொண்டு தனது மக்களைக் கொன்ற கொடூரத்துக்கும் அது அவசியமானதே.

ஒருகண்ணுக்கு வெண்ணெயும், மறு கண்ணுக்குச் சுண்ணாம்பும் தடவும் தங்களது இரட்டை வேட அரசியல் கலாசாரப் போக்கைத் தென்னிலங்கை நிறுத்திக் கொண்டு, மீதொட்டமுல்லவில் பாதிக்கப்பட்ட தனது மக்களுக்குத் தான் காட்டும் கரிசனை போன்று, வடக்கு, கிழக்கில் யுத்தத்தால் பாதிப்புற்ற தமிழருக்கு உதவ முன்வர வேண்டும்; உரிய நிவாரண மீட்புப் பணிகளைத் தங்கு தடையின்றித் தொடர வேண்டும்.

மீதொட்டமுல்லவில் காட்டிய பொறுப்புக் கூறலை வடக்கு, கிழக்குத் தமிழர்களை அழித்த நடவடிக்கைக்கும் பொருத்தமுடையதாக்க வேண்டும்.

அப்போது மட்டும்தான் இந்த நாட்டில் நல்லிணக்கமும், கூட்டுணர்வும், புரிந்துணர்வும் ஏற்படும்.

# நவீன உலகுக்கு ஏற்றவாறு கல்விக்கட்டமைப்பு தேவை

## கல்வி அமைச்சர் அகிலவிராஜ் தெரிவிப்பு



நவீன உலகத்துக்குப் பொருத்தமான வகையில் இலங்கையின் கல்விக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டின் முழு பாடசாலைக் கட்டமைப்பிலும் வசதிகளை மேம்படுத்த துரித வேலைத் திட்டம் நடை முறைப்படுத்தப்படும்.

பாடசாலை மாணவர்களின் சீருடைகளிலும் மாற்றங்களைச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. -என்றார்.

இதேவேளை 'விசாரியுங்கள், அறிந்துக் கொள்ளுங்கள். அது உங்களது உரிமையாகும்' என்ற தொனிப்பொருளில் பொது மக்களுக்குப் பொறுப்புக் கூறும் வகையில் கல்வி அமைச்சில் தகவல் அறியும் நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையத்துக்கான இணையத்தளம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனை கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் ஆகியோர் இணைந்து நேற்று முன்தினம் புதன்கிழமை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்துள்ளனர்.

அனைத்து கல்விசார் நிறுவனங்களும் இந்த நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிலையில், கல்வி தொடர்பான எந்தவொரு தகவலையும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் இந்த நிலையம் ஊடாகப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த நிகழ்வில் அமைச்சர்களுடன், கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெற்றியாராச்சி அமைச்சின் மேலதிக செயலாளர்கள், அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (எ)

# இலங்கை ஏற்றுமதிக்கு புதியதொரு திருப்புமுனை!

## வளைகுடா ஒத்துழைப்புச் சபை கதவு திறந்ததால்

இலங்கை ஏற்றுமதி செயற்பாடுகளில் நுழைவதற்கு உலகின் மிகப்பெரிய துறைமுகங்களில் ஒன்றான சோஹாரின் சக்தி வாய்ந்த வளைகுடா ஒத்துழைப்புச்சபை அதன் கதவுகளை திறந்துள்ளது. இது இலங்கையின் ஏற்றுமதித்துறைக்கு ஒரு புதிய திருப்புமுனையாகும் என்று ஓமான் நாட்டின் வெளியுறவு அமைச்சின் அரசவிவகாரங்களுக்கான தற்காலிக துணைச் செய லாளர் டாக்டர் மொஹமட் பின் அவாத் அல் ஹசன் தெரிவித்தார்.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சில், அமைச்சர் ரிஷாத் பதியுதீனுடன் இடம் பெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சோஹார் துறைமுக நகரம் ஆரம்பிக்கப்பட்டதைத்தொடர்ந்து மத்திய கிழக்கை மையமாக கொண்ட நாடுகள் மத்தியில் ஏற்றுமதிக்கு அப்பால் இலங்கையின் முக்கிய உற்பத்தி மற்றும் மீன் ஏற்றுமதி மீது பன் மடங்கு நன்மைகள் கிடைத்திருக்கின்றன.

வளைகுடா ஒத்துழைப்புச் சபை, இந்திய உபகண்டம் மற்றும் கிழக்கு ஆபிரிக்கப் பிராந்தியங்களில் இலங்கை தேயிலை மற்றும் மீன் ஏற்றுமதியைச் செயற்படுத்திக் கொள்ளலாம்.

சோஹாரில் இருந்து இலங்கையின் தேயிலை மற்றும் ஏனைய ஏற்றுமதிகளுக்கு வளைகுடா பிராந்தியத்தின் 3.5 பில்லியன் வாடிக்கையாளர்களை நேரடியாக எட்ட முடியும்.- என்றார்.(எ)

# தாயகம் திரும்புகின்றனர் இலங்கையர்கள் 74 பேர்

இந்திய முகாம்களில் புகலிடக் கோரிக்கையாளர்களாக இருந்த இலங்கையர்கள் 74 பேர் இந்த மாதம் நாடு திரும்பவுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான அமைப்புத் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில், 20 குடும்பங்களைச் சேர்ந்த 46 பேர் எதிர்வரும் 27ஆம் திகதி நாடு திரும்பவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 16 குடும்பங்களைச் சேர்ந்த 28 பேர் அடங்கிய மற்றுமொரு குழுவினர் எதிர்வரும் 28 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளனர் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

இதன்போது, இந்தியாவில் உள்ள அகதி முகாம்களில் பல வருடங்களாகக் காலம் கழித்து வந்த இலங்கையர்களே இவ்வாறு நாடு திரும்பவுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

நாடு திரும்பும் புலம்பெயர் இலங்கையர்களுக்கான விமானப் பயணச் சீட்டு மற்றும் உணவு ஆகியசெலவுகளைஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான அமைப்பே பொறுப்பேற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# சர்வமத விழா நாளை மானிப்பாயில்

யாழ்ப்பாணம், ஏப். 21

மதங்களுக்குள்ஒற்றுமையை உருவாக்கும் இலட்சியத்தை நோக்கிய சர்வமத விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை மானிப்பாய் சோதி வேம்படி ஸ்ரீ சத்தியசாயி பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

சத்தியசாயி பாடசாலைப் பணிப்பாளர் இ.வசந்தசேனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரேயும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் கௌரவ விருந்தினராக இலங்கை ஸ்ரீ சத்தியசாயி சேவா உலக நிறுவன தலைவர் வி.மனோகரனும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் கருத்துரைகளை நாகவிகாரையைச் சேர்ந்த வண. மீகஹ ஜந்துரே சிறிவிமல தேரர், கத்தோலிக்கத் திருச்சபை ஆயர் அதிவண. ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எம். பாலகைலாசநாத சர்மா, தென்னிந்தியத் திருச்சபை ஆயர் கலாநிதி டி.எஸ்.தியாகராஜா, யாழ்., கிளிநொச்சி மாவட்ட உலமா சபைத் தலைவர் அல் ஹாச் மௌலவி ஏ.எம்.ஏ. காசினி, இலங்கை ஸ்ரீ சத்தியசாயி உலக நிறுவனத்தைச் சேர்ந்த என்.புவனேந்திரன் ஆகியோர் நிகழ்த்துவர்.




## நாளை

22.04.2017
சனிக்கிழமை

நட்சத்திரம் : சதயம் மு.இ. 11.10 வரை
திதி : ஏகாதசி பி.இ. 12.35 வரை,

சுபநேரம் : 3.01 - 4.31 வரை
இராகுகாலம் : 9.01 - 10.31 வரை

# ரணிலின் பிரித்தாளும் தந்திரம் எம்மிடம் ஒருபோதும் பலிக்காது

## திட்டவட்டமாகக் கூறினர் கேப்பாபிலவு மக்கள்

முல்லைத்தீவு,ஏப்.21

ரணிலின் பிரித்தாளும் தந்திரத்துக்கு நாங்கள் பலிக்கடாவாக்கப்படமாட்டோம் என போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற கேப்பாபிலவு மக்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு மக்கள் படையினர் ஆக்கிரமித்து வைத்திருக்கின்ற தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி படை முகாமுக்கு முன்பாகவே போராட்டமொன்றை ஆரம்பித்திருந்தனர்.

இராணுவத்தின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் பல்வேறு கஷ்ட துன்பங்களுடன் தமது காணிகள் விடுவிக்கப்படும் வரை அங்கிருந்து செல்லப் போவதில்லை என்ற கொள்கையுடன் மக்கள் உறுதியான போராட்டத்தை முன்னெடுத்த வருகின்றனர்.

இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஐம்பதாவது நாளை நிறைவு செய்துள்ளது. ஆனாலும் தீர்வில்லாமல் போராட்டம் தொடர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந் நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கேப்பாபிலவு மக்களின் காணிகள் பகுதியளவில் விடுவிக்கப்படுமெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே, தமது காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும் என்பதே கோரிக்கை என்றும் அவ்வாறு முழுமையாக விடுவிக்கப்படாது விட்டால் தமது போராட்டம் தொடரும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, படையினர் வசமிருக்கின்ற காணிகளை விடுவிக்குமாறு நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து போராட்டத்தை மேற்கொள்ளும் போது தம்மிடையே குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு பல சதி முயற்சிகளும் நடைபெறுகின்றன எனவும் அந்த மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

குறிப்பாக ஒன்றாக இருக்கின்றவர்களைப் பிரித்து பார்ப்பதிலும் பிரித்துப் வைத்துச் செயற்படுத்துவதிலும் வல்லவரான இன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எங்களிடையேயும் பிரிவை ஏற்படுத்தும் நோக்கில் பகுதி பகுதியாக விடுவிப்பு என்ற நிலையில் இருக்கின்றார்.

ஆனால், அவரின் பிரித்தாளும் தந்திரோபாயத்துக்கு நாங்கள் ஒருபோதும் பலிக்கடாவாக்கப்படமாட்டோம். எங்களது ஒருமித்த கோரிக்கையும் நிறைவேற்றப்படும்வரை தொடர்ந்து போராட்டத்தை மேற்கொள்ளுவோம். - என்று அந்த மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.







## பண்டாரவன்னியன் சிலை மீண்டும் முல்லையில் நேற்றுத் திரை நீக்கம்!

முல்லைத்தீவு, ஏப்.21

வன்னியின் அடையாளம் மாவீரன் குலசேகரன் வைரமுத்து பண்டாரவன்னியனின் உருவச் சிலை நேற்று முல்லைத்தீவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள இந்த சிலையை, வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் திறந்து வைத்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனின் கோரிக்கைக்கு அமைய, வட மாகாண கலை, பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் உருவச்சிலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலேயர் ஆட்சியில் அவர்களால் பயன்படுத்தப்பட்ட பீரங்கி மீட்கப்பட்ட இடத்திலிருந்து, நேர் எதிரே உள்ள இடத்தில் இந்தச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன், வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், என்.சிவனேசன், கே.சிவாஜிலிங்கம், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் றுபாவதி கேதீஸ்வரன், மாகாண கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் உட்படப் பலர் கலந்து கொண் டனர். (ஐ-81)

## வீட்டுத்திட்ட வீடுகளில் வசிக்காவிட்டால் அவற்றை மீளப்பெறுவதற்குத் தீர்மானம்

### யாழ். பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப்.21

யாழ்ப்பாணத்தில் வழங்கப்பட்டுள்ள வீட்டுத் திட்ட வீடுகளில் பயனாளிகள் வசிக்காவிட்டால் அவற்றை அதிகாரிகள் மீளக் கையகப்படுத்த வேண்டும் என்று யாழ். பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களில் முஸ்லிம் மக்களின் மீள் குடியேற்றத்துக்காக வழங்கப்பட்ட வீடுகளில் 20 வீடுகள் பூட்டிய நிலையில் உள்ளதுடன் 5 வீடுகள் வாடகைக்குக் கொடுக்கப்பட்டுள்ளன என்று ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பரஞ்சோதி தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்களுக்காக வழங்கப்பட்ட வீட்டுத் திட்டப் பயனாளிகள் தெரிவின் போது பல முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன. இதில் பிரதேச செயலக அதிகாரிகள் தங்களுக்கு ஏற்ற பயனாளிகளைத் தெரிவு செய்து வீடுகளை வழங்கியுள்ளனர். இதனால் நியாயமாகவே வீடுகள் கிடைக்க வேண்டிய முஸ்லிம் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொது மக்களுக்கே குடியிருக்க வீடுகள் வழங்கப்படாத நிலையில் கிராம சேவையாளருக்கு வீட்டுத் திட்டம் வழங்கியது சரியா? - என்றார்.

இதற்குப் பதிலளித்த பிரதேச செயலர், நாங்கள் வீட்டுத்திட்டம் வழங்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய சகல விடயங்களையும் ஆராய்ந்தே அவை வழங்கப்பட்டன.

இதில் உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக நீங்கள் எங்களிடம் அறிந்துகொள்ளலாம் என்றார்.

இறுதியில் அனைத்து வீட்டுத் திட்டப் பயனாளிகளும் வழங்கப்பட்ட வீடுகளில் வசிக்காதுவிட்டால் அதனை மீள்பரிசீலனை செய்து கையகப்படுத்த வேண்டும் எனத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்துக்கு அனுப்பி வைப்பது என்றும் முடிவு எட்டப்பட்டது. (ஐ)

## நாடாளுமன்ற அமர்வு குறித்து அறிவிப்பு இல்லை!

நாடாளுமன்ற அமர்வுகளை நடத்துவது குறித்து பிரதமர், தமக்கு இன்னும் அறிவிக்கவில்லை என்று சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

மீதொட்டமுல்ல குப்பை மேட்டுச்சரிவு தொடர்பில் விசேட விவாதம் ஒன்றை நடத்துமாறு கூட்டு எதிர்க்கட்சியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நிலையில் பிரதமரின் கோரிக்கை அடிப்படையிலேயே நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ள சபாநாயகர், இதற்கான கோரிக்கை இன்னும் முன்வைக்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த நாடாளுமன்ற அமர்வு எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதி நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஐ)







## பொது மக்களின் காணி விடுவிப்பு கிளிநொச்சியில் கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஏப்.21

கிளிநொச்சி மாவட்டத்தில் முப்படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பொது மக்கள் மற்றும் திணைக்களங்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவித்தல் தொடர்பிலான மாவட்ட உயர்மட்டக் கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ. சுமந்திரன், ஈ.சரவணபவன், எஸ். சிறிதரன், மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் சாமந்தி வீரசிங்க மற்றும் கிளிநொச்சி படைகளின் கட்டளை அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள் மற்றும் காணி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர் (ஐ-70)

# கூட்டமைப்புத் தானாக வலிய வந்து தலைமைப் பதவியைக் கேட்கவில்லை!

மட்டக்களப்பு,ஏப்.21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தானாக வலிய வந்து தலைமைப் பதவியைத் தாருங்கள் என்று கேட்க வில்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குத் தலைமை தாங்குகின்றோம் என்று கூறியும் வரவில்லை.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்டத்துக்கான முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஏற்பாட்டில் அன்னை பூபதியின் 29 ஆவது வருட நினைவுதினம் மட்டக்களப்பு நாவலடியிலுள்ள அவரது கல்லறைக்கு அருகில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளமை வருமாறு:-



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் காட்டம்

ஜனநாயக ரீதியாக ஏறக்குறைய 9 தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மக்கள் வாக்களித்துள்ளனர். இதுவரையில் அசைக்க முடியாத வகையில் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைமையாகவும், இலங்கை அரசு மற்றும் சர்வதேசம் என்பனவற்றாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைமையாகவும் கூட்டமைப்பு இருந்து வருகின்றது.

இந்தத் தலைமை தமிழ் மக்கள் தொடர்பாக இலங்கை அரசு மற்றும் சர்வதேசம் ஆகியனவற்றுக்கு என்ன சொல்கிறதோ அந்தக் கருத்தையே இலங்கை அரசும், சர்வதேச நாடுகளும் கேட்கின்றன.

அதை விடுத்து, இனி மேலும் எவராவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பற்றிக் குறைகூறிக்கொண்டிருந்தால், அதைக் குறையாகக் கூறிக் கொண்டிருக்கலாமே தவிர, அதனால் எந்தத் தீர்வையும் அடைய முடியாது.

இலக்கை நோக்கிச் செல்ல வேண்டுமாக இருந்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்த வேண்டும். கூட்டமைப்புக்கு பின்னால் அனைவரும் அணிதிரள வேண்டும்.-என்றார். (ச)

## திருமலையில் குடிதண்ணீர் தட்டுப்பாடு!

திருகோணமலை,ஏப்.21

தற்போது வறட்சியான காலநிலை நிலவுவதால் திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி மற்றும் பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவுகளில் குடிதண்ணீருக்குபெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது எனப் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

கிணறுகளில்நீர்வற்றி வருவதால் பயிர்ச் செய்கைக்கு போதுமான நீரைப் பாய்ச்ச முடியாத நிலைமை காணப்படுகின்றது என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

வறட்சி காரணமாக குடி தண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்படுமாயின், அது தொடர்பில் பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்குமாறு திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மட்டு. மக்களுக்குச் சொந்தமான 20 காணிகள் படையினர் வசம்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொது மக்களின் வாழ்வாதார மற்றும் குடியிருப்புக் காணிகளைக் கொண்ட 20 இடங்கள் படையினர் மற்றும் பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவரால் நேற்று வியாழக்கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை, புணானை, மற்றும் புச்சாங்கேணி, தியாவட்டவான், கிரான், முறக்கொட்டாஞ்சேனை, கொம்மாந்துறை, மயிலம்பாவெளி, குருக்கள்மடம், ஒந்தாச்சிமடம், களுவாஞ்சிக்குடி, ஆயித்தியமலை, வவுணதீவு, கொக்கட்டிச்சோலை, பாலமுனை, பாலமீன்மடு, பெரியபோரதீவு ஆகிய இடங்களிலுள்ள மக்களுக்குச் சொந்தமான காணிகளே கையகப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக முறக்கொட்டாஞ்சேனைப் பாடசாலைக் காணியையும் படையினரே கையகப்படுத்தி வைத்துள்ளனர். இன்னமும் அதனை மாணவர்களின் பாவனைக்குக் கையளிப்பதற்குப் படையினர் முன்வரவில்லை. இது பற்றி பல தடவைகள் நாடாளுமன்றத்திலும், அதற்கு வெளியிலும் பேசியுள்ளோம். ஆனால், தீர்வு கிட்டவில்லை.-என்றுள்ளது. (ச)

## தமிழருக்கு நியாயமான தீர்வை அரசு வழங்க வேண்டும்!

மட்டக்களப்பு,ஏப்.21

தமிழ் மக்களுக்கு நியாயமானதீர்வை வழங்குவதற்கு இந்த நல்லாட்சி அரசு முன்வர வேண்டும். அத்துடன், மக்களுக்கு உள்ளக சுய நிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும்.

-இவ்வாறு கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்தார்.

அன்னை பூபதியின் 29ஆவது வருடநினைவு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்ட நாள்களில் பண்டா-செல்வா ஒப்பந்தம் கிழித்து எறியப்பட்ட நாளும் ஒன்றாகும். தமிழர் வரலாற்றில் ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி மிக முக்கியமான நாளாகும். அதன் பின்னரே இந்த நாட்டில் ஆயுதப் போராட்டங்கள் வெடிக்கத் தொடங்கின.

தொடர்ந்து தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு நசுக்கப்பட்டார்கள்' என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## இலங்கையில் முதல் முறையாக நோயாளிகளுக்காக பெகி கார் அறிமுகம்





இலங்கையில் முதல் முறையாக நோயாளிகளின் போக்குவரத்துக்காகப் பெகி கார் சேவை (நவீன தள்ளு வண்டி சேவை) ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவால் அம்பாறை வைத்தியசாலையில் இந்தச் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பிரதி அமைச்சர் அனோமா கமகே, கிழக்கு மாகாண சபைத் தலைவர் சந்திரதாஸ கலப்பத்தி மற்றும் முன்னாள் சுகாதார அமைச்சர் பீ.தயாராத், பிரதி சுகாதாரப் பணிப்பாளர் உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ச)

## கல்முனை கண்ணகி அம்மன் ஆலய சுற்றுமதில் விஷமிகளால் உடைப்பு!



கல்முனை,ஏப்.21

கல்முனை கடற்கரை கண்ணகி அம்மன் ஆலயத்தின் சுற்று மதில் விஷமிகளால் நேற்று முன்தினம் புதன்கிழமை உடைக்கப்பட்டுள்ளது.

இந்த மதில் ஏற்கனவே ஒரு தடவை தகர்க்கப்பட்டுள்ளது என நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஆலய நிர்வாகம் கல்முனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளது. இதனைஅடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற கல்முனைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கல்முனை மாநகரசபை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் கு.ஏகாம்பரம், உறுப்பினர் அ.விஜயரெத்தினம் மற்றும் சமூக சேவையாளர் சந்திரசேகரம் ராஜன் ஆகியோர் அப்பகுதிக்குச் சென்று பார்வையிட்டனர். (ச)

## ஒலுவில் துறைமுக நுழைவாயில் மணலை அகற்ற நடவடிக்கை!

ஒலுவில்,ஏப்.21

ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடலுக்குச் செல்லும் நுழைவாயிலில் நிரம்பியுள்ள மணலை அகற்றுவதற்கு முதற்கட்டமாக 40 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர் ரிஷாத்பதியுதீன் நடவடிக்கை எடுத்துள்ளார் என மட்டுப்படுத்தப்பட்ட கல்முனைக் கரையோர மாவட்ட மீனவக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எம்.ஜீ. எம்.பகுர்தீன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அம்பாறை மீனவக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்

நுழைவாயிலில் உள்ள கடல் மணலை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய, ஒலுவில் துறைமுகத்தை கடந்த வாரம் அவர் வந்து பார்வையிட்டார். அத்துடன், இந்த மணலை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் வாக்குறுதியளித்திருந்தார்.

எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினை ஏற்படாத வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் கடற்றொழில் அமைச்சர் ஆகியோருடன் கலந்துரையாடுவார் எனவும் அமைச்சர் கூறியிருந்தார்.

மேற்படி நுழைவாயில் கடல் மண்ணால் மூடப்பட்டுள்ளதால், மூன்று மாத காலமாக மீனவர்கள் தங்களின் படகுகளைக் கடலுக்குக் கொண்டு செல்வதற்கும் கடலிலிருந்து துறைமுகத்தரிப்பிடத்துக்கு கொண்டு வருவதற்கும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதன் காரணமாக சுமார் 5 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் தங்களின் தொழிலை இழந்து, பொருளாதார ரீதியாக கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர். -என்றார். (ச)

# தற்போது போதைப் பொருள்களே நாட்டில் மலிவாகக் கிடைக்கின்றன!

*முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறுகிறார்*


கொழும்பு, ஏப். 21

தற்போது போதைப் பொருள்களே நாட்டில் மலிவாகக் கிடைக்கின்றன என்று முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் குருநாகலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது ஆட்சிக் காலத்தில் தமிழ், சிங்களப் புத்தாண்டு காலங்களில் அத்தியாவசிய



பொருள்களை மக்களுக்கு சலுகை விலையில் வழங்கினோம். ஆனால், இம்முறை அரசாங்கம் மலிவாக பொருள்களை வழங்குவதாக விளம்பரம் மாத்திரம் செய்து கண் துடைப்புச் செய்தது.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வர முன்னர் மக்களுக்கு தேவையான அத்தியாவசியமான பொருள்களை மலிவாகப் பெற்றுக்கொடுப்பதாக கூறிய போதும் தற்போது விலைவாசி விண்ணை முட்டியுள்ளது.

இன்று போதைப்பொருள்களே மக்களுக்கு மலிவாக கிடைக்கின்றன என அறிய முடிகிறது. எமது காலத்தில் 1500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஹெரோயின் தற்போது 400 ரூபாவுக்கும் 500 ரூபாவுக்கும் கிடைக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

நல்லாட்சியின் மகிமையால் இன்று போதை பொருள்கள் நாட்டில் மலிந்துவிட்டன.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பில் கூட்டு எதிரணியின் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# விசாரணைகளுக்கு அஞ்சப் போவதில்லை!

**நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம கூறுகிறார்**

கொழும்பு, ஏப். 21

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுக்காற்று விசாரணைகளுக்கு அஞ்சப்போவதில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எவ்வாறான ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தாலும் எந்தவொரு ஒழுக்காற்று விசாரணைகளுக்கும் நான் அஞ்சப் போவதில்லை.

எவ்வாறான தடைகள் போடப்பட்டாலும் கூட்டு எதிர்க்கட்சியின் மே தினக் கூட்டத்தில் நாம் பங்கேற்பதைத் தடுக்கமுடியாது.

கண்டியில் நடைபெறவுள்ள மே தினக் கூட்டத்தில் சுதந்திரக் கட்சியின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் மட்டுமே பங்கேற்க உள்ளனர்.

எனினும், கூட்டு எதிர்க்கட்சியின் மே தினக் கூட்டத்திற்கு கூட்டமைப்பின் அனைத்துக் கட்சிகளும் பங்கேற்க உள்ளன.

வெளிநாடு சென்றுள்ள கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள்தவிர்ந்த அனைவரும் இந்த மே தினக் கூட்டத்தில் பங்கேற்பார்கள்.- என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மீதொட்டமுல்ல குப்பை மேட்டில் எஜமானுக்காக காத்திருக்கும் நாய்!



கொழும்பு, ஏப். 21

மீதொட்டமுல்ல குப்பை மேட்டில் தனது எஜமானின் வருகைக்காகக் காத்திருக்கும் நாய் ஒன்றின் புகைப்படம் சமூகவலைத்தளங்களில் பரவி அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்தமையால் ஏற்பட்ட அனர்த்தத்தினால் இதுவரை 33 உயிர்கள் பலியாகி உள்ளன. மேலும் 50 பேரைத் தேடும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பார்ப்பவர்களை கண்கலங்க வைக்கும் புகைப்படம் ஒன்று சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளது.

மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்தமையினால் புதைந்த வீட்டின் மீது 14ஆம் திகதி முதல் அமர்ந்திருக்கும் நாய் ஒன்றின் புகைப்படமே இவ்வாறு வெளியாகியுள்ளது.

தனது எஜமானைக் காணாமல் இந்த நாய் தவித்து வருகிறது. பல நாட்களாக உணவு, நீரின்றி இந்த நாய் அங்கு அமர்ந்திருப்பதாகப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

தனது எஜமான் உயிரோடு மீண்டும் வருவார் என்ற நம்பிக்கையில் இந்த நாய் காத்திருக்கிறது என்று அங்குள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

# இந்தியப் பிரதமர் மோடி வடக்குக்கு வரமாட்டார்!

கொழும்பு, ஏப். 21

அடுத்தமாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி யாழ்ப்பாணத்துக்கும் வருவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன என்று இந்திய அதிகாரிகளை மேற்கோள் காட்டி பி.ரி.ஐ. செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனால், இந்தியத் தூதரக வட்டாரங்கள் இந்தச் செய்தியை மறுத்துள்ளன.

இந்தத் தடவை இந்தியப் பிரதமர் தனது இலங்கை விஜயத்தின் போது, கொழும்பு, கண்டி, ஹட்டன் ஆகிய இடங்களில் நடைபெறும் நிகழ்வுகளில் மட்டுமே பங்கு பற்றுவார் என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அடுத்த மாதம் இலங்கையில் தொடங்கி அமெரிக்கா, இஸ்ரேல், ரஷ்யா, ஜேர்மனி, ஸ்பெயின், கசாக்ஸ்தான் ஆகிய நாடுகளுக்கு எதிர்வரும் ஜூலை மாதத்துக்குள் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார் என்றும் இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஐ.நா. வெசாக் கொண்டாட்டங்களில் பங்கேற்பதற்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அடுத்த மாதம் இரண்டாவது வாரத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது, யாழ்ப்பாணம் மற்றும் கண்டி ஆகிய இடங்களுக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி செல்வதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன என அதிகாரிகள் தெரிவித்தனர் என்றும் பி.ரி.ஐ. செய்தி வெளியிட்டுள்ளது.

அதேவேளை, கண்டியில் இந்திய உதவியுடன் அமைக்கப்படவுள்ள பாரம்பரிய நடனப் பாடசாலைக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டுவார் என்று அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ நேற்று முன்தினம் கூறியிருந்தார்.

ஹற்றனில் இந்திய உதவியுடன் அமைக்கப்பட்ட மருத்துவமனை திறப்பு விழாவிலும் இந்தியப் பிரதமர் பங்கேற்கவுள்ளார்.

எனினும், யாழ்ப்பாணத்தில் இந்தியப் பிரதமரின் நிகழ்ச்சி நிரல் தொடர்பான எந்தத் தகவலும் வெளியாகவில்லை.

கடந்த 2015 ஆம் ஆண்டு இலங்கைக்கான தனது முதலாவது விஜயத்தின் போதும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மே தினக் கூட்டம் புறக்கோட்டையில்!

கொழும்பு, ஏப். 21

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மே தினக் கூட்டம் புறக்கோட்டையில் நடைபெறும் என்று அக் கட்சியின் தலைவர் வண ஹெடில்லே விமலசார தேரர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் இந்தக் கூட்டம் நடைபெறும்.

இந்தக்கூட்டத்தில் கட்சியின் அனைத்து முக்கியஸ்தர்களும் பங்கேற்க உள்ளனர்.

எனினும், மே தினப் பேரணி எதனையும் நடத்தப் போவதில்லை. புறக்கோட்டையில் அமைந்துள்ள ஈ.ஏ.குணசிங்க சிலைக்கு அருகாமையில் கூட்டம் நடத்தப்பட உள்ளது.

மே தினமன்று ஈ.ஏ. குணசிங்க தொடர்பில் நூல் ஒன்றும் வெளியிடப்பட உள்ளது .- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


# பிரதமர் ரணிலின் புதுடில்லி விஜயம்; நாள்கள் இன்னமும் முடிவாகவில்லை!

கொழும்பு, ஏப். 21

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் புதுடில்லிக்கான விஜயத்துக்கான நாள்கள் குறித்த ஒழுங்குகள் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்று புதுடில்லி ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இருதரப்பு உறவுகளை மீளாய்வு செய்யும் நோக்கில் இந்த மாத இறுதியில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

புதுடில்லியில் உள்ள அதிகாரிகள், இலங்கைப் பிரதமரின்



விஜயம் இடம்பெறவுள்ளதை உறுதி செய்திருந்தனர்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கொழும்பு விஜயத்துக்கு முன்னதாக, இலங்கைப் பிரதமரின் இந்தியா விஜயம் இடம்பெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியப் பிரதமர் கொழும்பு வந்திருக்கும் போது, இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பு உடன்பாடு ஒன்றில் கையெழுத்திடுவது தொடர்பான இறுதிக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதே ரணில் விக்கிரமசிங்கவின் புதுடில்லி விஜயத்தின் முக்கிய நோக்கமாகும்.

ஏப்ரல் மாத இறுதியில் இந்த விஜயம் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், பயணநாள்கள் தொடர்பாக இன்னமும் இறுதியான தீர்மானம் எடுக்கப்பட வில்லை என்று புதுடில்லி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## முகநூல் தொடர்பில் 850 முறைப்பாடுகள்

கொழும்பு, ஏப்.21

இந்த ஆண்டின் இது வரையான 4 மாத காலப் பகுதியில் மாத்திரம் சமூக வலைத் தளங்கள் தொடர்பில் 850 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று இலங்கை கணினி அவசரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகளில் போலி முகநூல் கணக்குகள் தொடர்பிலேயே அதிகளவிலான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று அந்தப் பிரிவின் பிரதம பாதுகாப்பு பொறியியலாளர் ரொஷான் சந்திரகுப்த தெரிவித்துள்ளார். எனவே, முகநூல் கணக்குகளை வைத்திருக்கும் நபர்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (எ)

## சட்டவிரோதமாக தங்கியிருந்த பாகிஸ்தான் பிரஜை கைது!

கொழும்பு, ஏப்.21

விசா இன்றி சட்ட விரோதமாக இலங்கையில் தங்கியிருந்தவர் எனக் கூறப்படும் பாகிஸ்தான் பிரஜை ஒருவர் கொள்ளுப்பிட்டிப் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போதே 30 வயதான அந்த நபரைத் தாங்கள் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, சந்தேக நபர் புதுக்கடை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

# போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும்

## சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியம் கோரிக்கை



கொழும்பு, ஏப்.21

ஜெனீவா தீர்மானத்துக்கு அமைவாக, மைத்திரிபால சிறிசேன- ரணில் விக்கிரமசிங்க அரசு இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகளை நடத்த வேண்டும் என்று சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியத்தைச் சேர்ந்த அகலங்க ஹெற்றியாராய்ச்சி இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போரின் போதும், போருக்குப் பின்னரும் குற்றங்களை இழைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

போரின் போது மக்களுக்கு கொடுமைகளை மேற்கொண்ட சீருடையில் உள்ளவர்களைக் காப்பாற்றுவதற்கு விமல் வீரவன்ஸவும், உதய கம்மன்பிலவும் முயற்சிக்கின்றனர்.

பொறுப்புக்கூறல் விவகாரங்கள் சரியாகத் தீர்க்கப்படாவிட்டால் பயங்கரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

விடுதலைப் புலிகளை வெற்றி கொண்டவர்கள் என்பதற்காக குற்றமிழைத்தவர்கள் தண்டனையில் இருந்து தப்பிக்கக் கூடாது.

போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பில் முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.-என்றார்.

## தினசரி ராசி பலன் 21.04.2017

ஏவிளம்பி வருஷம் 2017 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 8 ஆம் நாள் தசமித்திதி பி.இ. 4.55 மணி வரை. பின்னர் ஏகாதசி. நட்சத்திரம்: அவிட்டம் பி.இ. 2.36 மணி வரை. பின்னர் சதயம். மரணயோகம் பி.இ. 2.36 மணி வரை. ராகுகாலம்: பகல் 10.36 முதல் 12.09 மணி வரை. சுபநேரம்: மாலை 5.58 மணி முதல் 7.28 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி: சித்திரைமாத தேய்பிறை தசமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: அவிட்டம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** நன்மையான நாள். வருமானம் வளமாக இருக்கும். அயல் நாட்டு வேலைக்கு முயற்சி செய்தவர்களுக்கு அதற்குரிய பலன் கிடைக்கும்.

**ரிஷபம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. உத்தியோகத்தில் போட்டிகளால் கிடைக்க வேண்டிய பதவி கைநழுவிப் போகும். கவனம் தேவை.

**மிதுனம்:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. பணப்புழக்கம் சரளமாக இருக்கும். நீண்டகாலக் கடன்கள் தீரும். வேலைக்குப் பெண்களுக்கு வரவேற்பு அதிகரிக்கும்.

**கடகம்:** அலைச்சல் மிகுந்த நாள். செய்யும் தொழில் சம்பந்தமாக அலைய வேண்டிவரும். சிலர் வாடகை வீடு தேடித் திரிவார்கள்.

**சிம்மம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. முயற்சிகள் சிறிது தாமதத்தின் மேல் வெற்றியளிக்கும். பயணங்களில் பொருள்கள் காணாமற் போகக்கூடும். கவனம் தேவை.

**கன்னி:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் உயர்வடையும். உத்தியோக உயர்வுகள் கிடைக்கும். சுயதொழில் செய்பவர்கள் மேன்மை அடைவார்கள்.

**துலாம்:** மகிழ்ச்சியான நாள். பணபலம் அதிகரிக்கும். செய்யும் தொழிலில் முன்னேற்றமும், வருமானமும் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** கவலையான நாள். பணப்புழக்கம் குறையும். வேலைக்குப் போகும் பெண்களுக்கு வேலைப்பளு அதிகமாகும்.

**தனுசு:** சம பலன்கள் காணப்படுகின்றன. பிள்ளைகளால் விரும்பத்தகாத நிகழ்ச்சி ஏற்படும். வீணான பேச்சுகளால் அயலவருடன் மனவேறுபாடுகள் ஏற்படும்.

**மகரம்:** இன்பமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். பிரிந்திருந்த சகோதரர் வீடு தேடி வருவார்.

**கும்பம்:** அதிஷ்டமான நாள். தனலாபம் பெருகும். தொழிலாளர்களுக்குத் தொடர் தொழில் வாய்ப்புகள் கிடைக்கும்.

**மீனம்:** யோசனையான நாள். பணவரவுகள் திட்டமிட்டு வருவதில் தாமதம் ஏற்படும். தொழிலில் பிரயாசை, அலைச்சல்கள் அதிகரிக்கும்.

சந்திராட்டமநாள்: மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும்.

## பல்கலைக்கழக இசற் புள்ளி அடுத்தமாத நடுப்பகுதியில்

பல்கலைக்கழகத் தெரிவுக்கான இசற் புள்ளிகளை அடுத்த மாத நடுப்பகுதியில் வெளியிட நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மொஹான் சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பல்கலைக்கழகங்களில் 2016/2017 கல்வியாண்டுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன.

இம்முறை பல்கலைக் கழகங்களுக்கு 29 ஆயிரம் மாணவர்களை இணைத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதத்துக்குள் மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.-என்றார். (எ)

## கடவுச்சீட்டுக்களை இணையத்தின் மூலம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை!

கொழும்பு, ஏப்.21

கடவுச்சீட்டுக்களை இணையத்தின் மூலம் அனுப்பி வைக்கும் வேலைத் திட்டத்தை நடை முறைப்படுத்துவதற்கு குடிவரவு- குடியகல்வுதிணைக் களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

குடிவரவு குடியகல்வு திணைக் களத்தை நவீனமயப் படுத்தும் வேலைத் திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதற்குத் தேவையான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக கடவுச் சீட்டுக்களை புதுப்பிப்பதற்கான விண்ணப்பங்களை இணையத்தின் மூலம் அனுப்பி வைக்கும் வாய்ப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கானபணத்தை கடன் அட்டைகள் மூலம் வழங்கவும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இவ்வருட இறுதிக்குள் இந்த வேலைத் திட்டத்தை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக, குடிவரவு குடியகல்வுத் திணைக் களம் மேலும் சுட்டிக் காட்டியுள்ளது.

## புத்தளத்தில் தொழில் முயற்சி ஊக்குவிப்பு

புத்தளத்திலுள்ள இளைஞர்களை வர்த்தகம், சுயதொழில் துறையில் ஆர்வமூட்டவும், அவர்களைச் சிறந்த துறை சார் வர்த்தகர்களாக பரிணமிக்கச் செய்வதற்கும் வேலைத் திட்டமொன்று, வர்த்தக கைத்தொழில் அமைச்சினால் புத்தளத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அரச அங்கீகாரம் பெற்ற திணைக்களங்கள் ஊடாக புத்தளம் மாவட்டத்தில் இளைஞர்களுக்கான தொழில் முயற்சியாண்மை, தொழில் ஊக்குவிப்பு மற்றும் தலைமைத்துவ வழிகாட்டல் செயலமர்வு போன்றவற்றை முன்னெடுக்க அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் புத்தளம் மாவட்ட இளைஞர் அமைப்பினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்தச் செயற்றிட்டங்களில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. மேலதிக விவரங்களுக்கு 0713322777, 0768553016, 0775868885, 0777243143 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஓட்டோவுடன் மோ.சைக்கிள் விபத்து; ஹப்புத்தளையில் இளைஞன் சாவு!



ஹப்புத்தளை - நுவரெலியா பிரதான வீதியின் வங்கியகும்புர கந்தே புஹூல் பொல சந்தியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

பொரலாந்தை நகரிலிருந்து கெப்பெடிபொல நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று எதிர்த்திசையில் சென்றஓட்டோவுடன்மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்த 26 வயது இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் பொரலாந்தை கந்தேபுஹூல் பொல பகுதியைச் சேர்ந்த எச்.எம்.ரொமேஸ் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று ஆரம் பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை, விபத்து தொடர்பில் ஓட்டோச் சாரதியை வெலிமடை பொலிஸார் கைது செய்துள்ளமையுடன், மேலதிக விசாரணைகளையும் மேற் கொண்டு வருகின்றனர்.

மேலும், உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக பொரலாந்தை பிரதேசவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (எ)

# அரசைக் குறை கூறுவோர் தாங்கள் என்ன செய்தார்கள்?



**கூட்டமைப்பினரைப் பார்த்து ஈ.பி.டி.பி. ஜெகன் கேள்வி**

கடந்த காலங்களில் நாம் அரசுடன் இணக்க அரசியல் நடத்திய போது எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா பாரிய வேலைத் திட்டங்களை முன்னெடுத்தமையுடன், அதன் பலாபலன்களையும் எமது மக்கள் அனுபவிக்கும் வழிவகைகளையும் ஏற்படுத்தினார்; அதை நீங்களும் அறிவீர்கள். தற்போது நாங்கள் அரசுடன்பங்காளிகளாக இல்லா விட்டாலும், புதிய அரசுடன் பலமான உறவுகளைப் பேணி வருவதால், மக்களின் கோரிக்கைகளைநிறைவேற்றிக் கொடுப்பதற்கு எம்மால் முடியுமான வகையில் முயற்சித்து வருகின்றோம் என்று ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நிர்வாகச் செயலாளர், கா.வே.குகேந்திரன் (தோழர் ஜெகன்) தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கிறீன் கிங்ஸ் சனசமூக நிலையமும், விளையாட்டுக்கழகமும் இணைந்து கடந்த திங்கட்கிழமை நடத்திய விளையாட்டுப் போட்டியில், பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு, வெற்றி பெற்றவீரர்களுக்குப் பரிசில்களை வழங்கி வைத்து சிறப்புரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தனது உரையில் தெரிவித்தவை வருமாறு:

இப்போது தாமே ஆட்சியில் ஏற்றியதாகக் கூறும் அரசுடன் இணக்க அரசியல் நடத்துவதாகக் கூறிக்கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், இதுவரை தமிழ் மக்களுக்கு எதையும் செய்யவில்லை. அரசாங்கத்தை நம்புங்கள் என்றுமக்களுக்குகூறியவர்கள், இப்போது அரசாங்கம் எதையும் செய்வதாக இல்லை என்றும், அரசாங்கம் தம்மை ஏமாற்றினால், அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பி வைப்போம் என்றும் கூறுகின்றார்கள். அரசு எதையும் செய்யவில்லை என்று கூறுகின்ற கூட்டமைப்பினர், தமது கையிலுள்ள அதிகாரங்களைக் கொண்டு என்ன செய்தார்கள் என்பதை தமிழ் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

பிரதமருக்கு ஒப்பாக எதிர்க்கட்சித் தலைமைப் பதவி, அமைச்சுக்களுக்கு ஒப்பான அரசுடன் நெருக்கம், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்களின்இணைத்தலைமை பதவிகள், வடக்கு மாகாண சபையில் ஆளுங்கட்சி, கிழக்கு மாகாண சபையில் பங்காளிக் கட்சி என்று அதிகாரத்தில் இருந்தபோதும் அந்த அதிகாரங்களைவைத்துக்கொண்டு தமிழ்மக்களுக்கு எதையும் செய்து கொடுக்காமல், அரசில் அதிகாரத்தை வீணடித்துக் கொண்டு இருக்கின்றார்கள் கூட்டமைப்பினர்.

இந்த நிகழ்விற்குத் தலைமை தாங்கும் தலைவர் பல்வேறு கோரிக்கைகளை எம்மிடம் முன் வைத்திருக்கின்றார். மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் அதிகாரத்தில் இன்று நாங்கள் இல்லை. ஆனாலும் ஜனாதிபதியுடனும், பிரதமருடனும் நல்லுறவை நாம் கொண்டிருப்பதால் எம்மால் முடியுமானவரை எமது மக்களின் பலவிதமான கோரிக்கைகளுக்குத் தீர்வுக்ளைப்பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சிக்கின்றோம்.

இங்கே நிகழ்வின் தலைவர் முன்வைக்கும் கோரிக்கைகளை வடக்கு மாகாணசபை மூலமாக இலகுவாகத் தீர்க்க முடியும். ஆனால் வடக்கு மாகாண சபையைப் பொறுப்பேற்றவர்கள் அதை செயலூக்கமாக முன் நகர்த்தவில்லை. அவர்கள் ஏட்டிக்குப் போட்டியாக தீர்மானங்களை மட்டுமே நிறைவேற்றி அதைத் தமது நூலகத்தில் ஆவணப்படுத்தி வைத்துள்ளார்கள். அதனால் மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை.

மத்திய அரசால் வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்படும் நிதியில் பெருந்தொகையானநிதி முறையாகப் பயன்படுத்தப்படாமல் திரும்பிப் போகின்ற நிலைமையே தொடர் கதையாக இருக்கின்றது. இந்த நிலைமையை எதிர்காலத்தில் மக்கள் மாற்றி அமைக்கவேண்டும். மக்களுக்கு அர்ப்பணிப்புடனும், தேவைகளை உணர்ந்தும் சேவை செய்யக்கூடியவர்களை மக்கள் இனங்கண்டு அதிகாரங்களைக் கையளிக்க வேண்டும். - என்றார்.

## அல்லைப்பிட்டி வெண்புரவியில் பன்ன வேலைப் பயிற்சி

அல்லைப்பிட்டி, ஏப்.21

அல்லைப்பிட்டி வெண்புரவியில் உள்ள மாதர் சங்கத்தினருக்கான பன்ன வேலைப் பயிற்சி வகுப்பு கியூடெக் - கரித்தாஸ் சர்வமத சக வாழ்வு அரங்க ஆலோசனையுடன் பனை அபிவிருத்திச் சபையினரூடாக எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டு ஆறு மாத காலப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

பனை வளங்களைப் பயன்படுத்தி மகளிர் வாழ்வாதார முன்னேற்றத்துக்கான வழிகளை மேம்படுத்தப் பனை அபிவிருத்தி முன்னேற்ற அமைப்பினரால் இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது.

இப் பயிற்சியில் முழுமையாக பங்குபற்றுவோருக்கு ஊக்கத் தொகையும் உபகரணங்களும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

## இலங்கையின் கடல் வள அபிவிருத்திக்கு வியட்நாம் தொழில்நுட்ப உதவி வழங்கும்

### நீரியல்வள அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.21

இலங்கையின் கடல் வள அபிவிருத்திக்காக வியட்நாம் தேவையான அனைத்து தொழில்நுட்ப உதவிகளையும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துள்ளது என கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வியட்நாமுக்கான உத்தியோக பூர்வ விஜயத்தில் இணைந்து கொண்டிருந்த கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் மஹிந்த அமரவீர, அந்த நாட்டு கடற்றொழில் அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களின் பிரதிபலனாகவே இந்த உதவித் திட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

வியட்நாம் நீரியல்வள தொழில் தொடர்பான கல்வி சுற்றுப் பயணத்திலும் அமைச்சர் மஹிந்த அமரவீர பங்குபற்றியிருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்றுமதி மீன் வகையான பெஞ்ஜியஸ் என்ற மீன் வகையை இலங்கையில் உற்பத்தி செய்கின்றமை குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த மீன்வகையை ஏற்றுமதி செய்வதன் ஊடாக ஒரு கிலோகிராமுக்கு 3 ஆயிரம் ரூபா கிடைப்பதுடன், இதற்காக பெரிய கேள்வி நிலவுகின்றது.- என்றும் அமரவீர கூறினார் (ஐ)

## நெல்லியடி சந்தையில் விவசாயி மீது தாக்குதல்

மந்திகை, ஏப்.21

உற்பத்திப் பொருள்களைச் சந்தைக்குக் கொண்டு சென்ற விவசாயி ஒருவர் மீது சந்தையில் இருந்த தரகர் ஒருவர் தாக்குதல் மேற் கொண்ட சம்பவம் நெல்லியடிச் சந்தையில் கடந்த செவ்வாய்க் கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

கரணவாய் பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் உற்பத்தி பொருள்களைச் சந்தைக்குக் கொண்டு சென்ற போது தரகர் தனக்குத் தருமாறு கேட்டுள்ளார். விவசாயி வழங்க மறுக்கவே அவரைத் தாக்கியுள்ளார் என்றும் தெரியவந்துள்ளது. (இ-40)

## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஏப்.21

கிறீன்பீல்ட் சனசமூகநிலையத்தின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் குருசோ வீதி கிறீன் பீல்ட் மண்டபத்தில் இடம்பெறும்.

இதில் நீரிழிவு, இரத்த அழுத்தம் மற்றும் கண் பார்வைக் குறைபாடு போன்றன பரிசீலிக்கப்படும் எனவும் அனைவரையும் கலந்து பயனடையுமாறும் கேட்டுள்ளனர். (ச)

## குப்பையில் இருந்து மின்சாரம் பெறும் செயற்றிட்டம் இலங்கையில் இல்லை

**நகர அபிவிருத்தி அமைச்சு சுட்டிக்காட்டு**

கொழும்பு, ஏப்.21

குப்பைகளில் இருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக, மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய முன் வைத்த வேலைத் திட்டத்தை அமுலாக்கும் தொழில்நுட்பம் இலங்கையில் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீதொட்டமுல்ல குப்பை மேடு தொடர்பில் தாம் முன்வைத்த வேலைத் திட்டத்தை நகர அபிவிருத்தி அமைச்சு நிராகரித்தது என்று மேல் மாகாண முதலமைச்சர் குற்றம் சுமத்தி இருந்தார்.

இது தொடர்பில் விளக்கமளித்துள்ள நகர அபிவிருத்தி அமைச்சு வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்த வேலைத் திட்டத்தைப் பாரப்படுத்த உத்தேசிக்கப்பட்டிருந்த பிரித்தானிய நிறுவனம் ஒன்றிடம் முன்வைக்கப்பட்ட 17 பிரச்சினைகளுக்கு இன்னும் பதில் வழங்கப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடு தலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின்: தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




122

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### முல்லைத்தீவுச் சமர்

விடுதலைப் புலிகளைத் தேடி அழிக்கும் நோக்குடன் வன்னிப் பெருநிலப்பரப்பில், விரைவில் பொருது களங்களைச் சிங்கள அரசு திறந்து விடுமெனப் பிரபாகரன் சரியாகவே எடைபோட்டார். மரபுவழிப் போர் முறையில் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்ற பலம் பொருந்திய விடுதலை இராணுவமாகப் புலிப் படையைக் கட்டி எழுப்புவதன் மூலமே எதிரியின் எதிர்காலப் படையெடுப்புகளை முறியடிக்க முடியுமெனவும் அவர் கருதினார். சிங்கள இராணுவத்தின் பெரும் படைத் தளங்களைவலிந்துதாக்கி அழிப்பதற்கும் மரபு வழிப் போரியல் வடிவம் இன்றியமையாதது என்பதும் அவரது அபிப்பிராயம்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போரியல் வளர்ச்சியில் முல்லைத்தீவுச் சமர் ஒரு வரலாற்றுத் திருப்பு முனையாக அமைந்தது. இந்தச் சமரில் ஈட்டிய வெற்றியானது புவியியல் கேந்திர அனுகூலங்களுடன் கடற்புலிகளின் அபாரமான வளர்ச்சிக்கும், மரபுவழி இராணுவக் கட்டமைப்பாகப் புலிகளின் தரைப் படையணிகளது விரிவாக்கத்துக்கும் வழிகோலியது. முல்லைப் படை முகாமில் கைப்பற்றிய கனரக ஆயுதத் தளபாடங்களுடன் பீரங்கி, மோட்டார் படைப் பிரிவுகளைக் கட்டியெழுப்பினார் பிரபாகரன். விமான எதிர்ப்புப் படையணி, கவச எதிர்ப்புப் படையணி போன்ற புதிய படைப் பிரிவுகள் உருவாக்கப்பட்டு, விரிவாக்கப்பட்டன. தகவல் தொடர்பு, மருத்துவம், விநியோகம், போக்குவரத்துப் பிரிவுகளும் விரிவாக்கம் கண்டன. போர் அறிவியல் நுட்பம் பயின்ற, நவீன ஆயுதங்கள் தரித்த சிறப்புப் படைகளாகத் தாக்குதல் அணிகள் நவீனமயம் பெற்றன. ஒரு வலுமிக்க மரபுவழி இராணுவமாகப் புலிப் படையை வளர்த்தெடுத்த பிரபாகரன் தனது போர் அணிகளைக் கடும் பயிற்சியிற் புடம் போட்டு எடுத்தார். தென்னிலங்கையில் போர் வெறி பிடித்த பேரினவாத ஆட்சிப்பீடம் தமிழரின் சுதந்திர இயக்கத்தைப் பூண்டோடு அழிக்கத் திட்டம் தீட்டிய வேளையில், வன்னியில் தமிழரின் விடுதலை இராணுவம் வரலாறு காணாத வளர்ச்சிப் போக்கில் வீறு நடை போட்டது.



### 'ஜெயசுக்குறுச்' சமர்: மரணத்தின் நெடுஞ்சாலை

விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் எதிர்பார்த்தது போலவே சந்திரிகாவின் அரசு வன்னியில் புதிய பொருது களங்களைத் திறந்தது. ஈழத் தமிழரின் எழுச்சி வடிவமான புலிகள் இயக்கத்தை அழித்து, தமிழரின் தாயக நிலங்களைச் சிங்கள அரசாட்சியின் கீழ் அடிமை கொள்ள வேண்டும் என்ற வெறியுடன் புதிய படையெடுப்புகள் முடுக்கி விடப்பட்டன. இந்தப் படை நடவடிக்கைகளில் வரலாற்று முக்கியத்துவம் பெற்றது 'ஜெயசுக்குறுச்' (வெற்றி நிச்சயம்) சமராகும். இரண்டாவது உலக யுத்தத்தின் பின்பு மிகவும் நீண்ட சமராக (Longest Battle) இராணுவ ஆய்வாளர்களால் கருதப்படும் இந்தப் போர் நடவடிக்கை பதினெட்டு மாதங்கள் வரை நீடித்தது. ஜெயசுக்குறுச் சமரின் முழுப் பரிமாணங்களையும் விவரிப்பதானால் ஒரு பெரிய நூல் எழுதவேண்டி வரும். அது எமது நோக்கமல்ல. இங்கு தரப்படுவது ஒரு சுருக்கமான வரலாற்றுப் பதிவாகும். ஜெயசுக்குறுச் சமரின் மூலோபாயக் குறிக்கோள் வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரை, 70 கிலோ மீற்றர் நீட்சியுடைய, ஏ-9 நெடுஞ்சாலையைத் திறந்து, வடக்கையும் தெற்கையும் இணைப்பது என அரச தரப்பில் கூறப்பட்டது. எனினும், இந்தப் படை நடவடிக்கையின் உண்மையான குறிக்கோள் வேறு. வன்னி மண்ணின் மார்பை இரண்டாகப் பிளந்து, விடுதலைப் புலிகளை நேரடி மோதலுக்கு வலிந்து இழுத்து, அவர்களது மையத் தளங்களை அழித்து, யாழ்ப்பாணப் படை முகாம்களுக்கு விநியோகப் பாதையை அமைத்து, தமிழரின் வரலாற்றுத் தாயகத்தைச் சிங்கள இராணுவத்தின் நிரந்தரக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதே இந்தச் சமரின் இலக்கு. நாற்பதாயிரம் துருப்புகளைக் குவித்து, யாழ்ப்பாணக் குடா நாட்டைத் தனது இரும்புப் பிடிக்குள் இறுக்கி வைத்திருந்தது சிங்கள அரசு. இந்தப் பெரும் ஆக்கிரமிப்புப் படைக்கு, பெரும் செலவில், பெரும் சிரமத்துடன் கடல் வழியாகவும் வான் வழியாகவும் விநியோகம் வழங்கப்பட்டு வந்தது. முல்லைக் கடலில் கடற்புலிகளின் திடீர்த் தாக்குதல்களும், விமான எதிர்ப்புப் படைப் பிரிவின் ஏவுகணைத் தாக்குதல்களும் கடல் - வான் விநியோகத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாக எழுந்தன. எனவேதான் தரை வழிப் பாதை விநியோகம் அரசுக்கு அவசியத் தேவையாக எழுந்தது. எனவே, ஒரு புறம் வன்னியை ஊடறுத்துச் செல்லும் ஏ-9 நெஞ்சாலையைத் திறந்து தரைவழி விநியோகத்தை நிறுவுவதுடன், மறுபுறம் முன்னேறும் பாதையில், புலிகளையும் தீர்த்துக் கட்டலாமெனச் சிங்களப் படைத் தலைமை திட்டம் தீட்டியது. எனவே, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த வன்னிப் பெரும் சமருக்குச் சந்திரிகா அரசு முக்கியத்துவம் வழங்கியதுடன், இந்தப் போர் நடவடிக்கையை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டுமென்ற உறுதிப்பாட்டுடன் பெரிய அளவில் பல மாதங்களாகப் போராயத்தங்களைச் செய்தது. இந்தச் சமருக்காக, தென்னிலங்கையின் பல மாவட்டங்களில் இருந்தும், குறிப்பாகக் கிழக்கில் இருந்தும் படையணிகளைத் தருவித்து, இருபதாயிரம் துருப்புகளைக் கொண்ட பெரியதோர் ஆக்கிரமிப்புப் படை திரட்டப்பட்டது. தரைப் படைக்கு வலுச் சேர்க்கப் பெருந்தொகையில் டாங்கிகள், கவச வாகனங்கள், பீரங்கிகள், கனரக ஆயுதங்கள் போன்றனவும் குவிக்கப்பட்டன. சிங்கள - பௌத்த நாட்குறிப்பேட்டின்படி நற்சகுன நாளும் தெரிவாகிப் படையெடுப்புத் திகதியும் குறிக்கப்பட்டது.



1997 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் நாளன்று ஜெயசுக்குறுச் சமர் ஆரம்பமானது. போர் விமானங்களும் பீரங்கிகளும் குண்டுமழை பொழிந்து முன்னரங்குகளைத் தாக்கி அழிக்க, டாங்கிகள் அனல் கக்கி முன்னேற, அதன் பின்னால் கவச வாகனங்களிலும் கால் நடையாகவும் வரிசை வரிசையாக ஆயுதம் தரித்த ஆக்கிரமிப்புத் துருப்புகள் வன்னி மண்ணை ஊடறுத்து இரு களமுனைகளில் முன்னேறின.

வவுனியாவிலிருந்து நொச்சி மோட்டை ஊடாக ஓமந்தை வரை நகர்ந்து அங்கிருந்து கிளிநொச்சி நோக்கி முன்னேறுவது ஒரு கள முனையின் இலக்கு. டொலர் - கென்ட் பண்ணைப் பகுதியூடாக முன்னேறி நெடுங்கேணியைக் கைப்பற்றி, அங்கிருந்து புளியங்குளம் வரை நகர்ந்து முதல் அணியுடன் இணைந்து கொள்வது இரண்டாவது கள முனையின் நோக்கு. பின்பு இரு களமுனைப் படைகளையும் இணைத்து, புலிகளின் தளங்களைத் தேடி அழித்தபடி கிளிநொச்சி வரை முன்னேறிச் செல்வதே ஜெயசுக்குறுவின் மூலோபாயக் குறிக்கோள். 45



மைல் தூரமுடைய கிளிநொச்சி வரையிலான இந்த நெடுஞ்சாலையை நான்கு மாதங்களில், அதாவது மாரி மழை காலத்துக்கு முன்னராகக் கைப்பற்றி விடுவதே சிங்களப் படைத் தலைமையின் திட்டமாக இருந்தது.

இரு முனைகளிலிருந்தும் இராணுவத்தினர் வன்னியின் எல்லைப் பிரதேசத்தை ஊடுருவி முன்நகரத் தொடங்கியதும் விடுதலைப் புலிகளின் போர் அணிகள் மூர்க்கமான எதிர்த் தாக்குதலை மேற்கொண்டன. வன்னி மீதான படையெடுப்பை எதிர்பார்த்துக் காத்திருந்த பிரபாகரன் உடனடியாகவே பீரங்கி, மோட்டார் படைப்பிரிவுகளைக் களத்தில் இறக்கினார். புலிகளின் கடும் எதிர்ப்புக் காரணமாக சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளின் முன்னேறும் வேகம் குறைந்தது. இதுவே முதற் தடவையாக, சிறிலங்கா இராணுவம் புலிகளின் பீரங்கி எறிகணைகளுக்கு முகம் கொடுத்துப் போரிட நேரிட்டது. இதனால் அரச படைகளுக்கு உயிர்ச்சேதம் அதிகரித்தது. எல்லைப் புறக் கிராமங்களாகிய ஓமந்தையையும் நெடுங்கேணியையும் கைப்பற்றுவதற்கு இரண்டு வாரங்கள் வரை கடும் சமர் புரிய வேண்டியிருந்தது. இந்தச் சண்டையில் 125 படையினர் கொல்லப்பட்டதுடன் 500 பேர் வரை காயமடைந்தனர். அத்துடன் 4 டாங்கிகள் அழிக்கப்பட்டன. மிகவும் துல்லியமாக, அச்சொட்டாக நடத்தப்பட்ட புலிகளின் பீரங்கி, மோட்டார் தாக்குதல்களின் விளைவாக, படுகாயமடையும் படையினரின் விகிதாசாரம் நாளுக்கு நாள் உயர்ந்து வர நகர்வு வேகமும் நாளுக்கு நாள் படிப்படியாகக் குறைந்தது.

(தொடரும்...)

# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?” 154

பொன்.வேணு கிருஷ்ணா

இந்த அபிவிருத்திகள் எத்தனை வேகமாக கட்டவிழ்ந்திருக்கின்றன என்பதே மிக அசாதாரணமானதாகும். பெரும்பகுதி, அல் கெய்தாவின் சிரிய துணையமைப்பின் கட்டுப்பாட்டில் இருக்கும் சிரியாவின் வடமேற்கு இட்லிப் மாகாணப் பகுதியில் நடந்த ஒரு சம்பவத்தில், சுமார் 70 பேர் நச்சு வாயுவால் கொல்லப்பட்டனர் என்று கூறப்பட்டு முதல் செய்தி வெளியான 48 மணி நேரத்திற்குள்ளாக இந்த கப்பல்தள ஏவுகணைகள் சிரியாவுக்கு எதிராக செலுத்தப்பட்டன.

சம்பவம் தெரியவந்த சில நிமிடங்களுக்குள்ளாகவே, அமெரிக்க பெருநிறுவன ஊடகங்கள் நடவடிக்கையில் இறங்கின, ஜனாதிபதி பஷார் அல்-அசாத்தின் அரசாங்கமே குற்றவாளி என்று கூறி கண்டனம் செய்தன. நியூ யோர்க் டைம்ஸ் மற்றும் பிற முக்கிய செய்தித் தாள்களின் தலையங்க ஆசிரியர்களும், அவர்களுடன் சேர்ந்து தொலைக்காட்சி செய்திநிகழ்ச்சிகளின் தலைமைத் தொகுப்பாளர்கள் அனைவருமே இதே திரைக்கதையை முன்நிறுத்தி, தார்மீக ஆவேசக் குரல்கொடுத்ததோடு அமெரிக்காபதிலடி கொடுக்கவேண்டும் என்றும் கோரினர். ஒரு தெளிவான முன்னேற்பாடுடனான போர் பிரசார நடவடிக்கை நடத்தப்படுவதற்கு முன்பாக ஊடகங்கள் முன்கூட்டியே பாடம் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையே ஒவ்வொன்றும் சுட்டிக்காட்டுகிறது.

**வெள்ளை மாளிகையின் செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் எதிரொலித்த ட்ரம்ப்**


புதன்கிழமையன்று(05.04.2017), இந்த ஊடகக் கதையாடலை வெள்ளை மாளிகையின் செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் எதிரொலித்த ட்ரம்ப், “ஆசாத் ஆட்சியின் கொடூர நடவடிக்கைகள் சகித்துக் கொள்ள முடியாது” என்று அறிவிக்க, அதேநேரத்தில் ஐ.நாவுக்கான அவரது தூதர், நிக்கிஹேலி, ஒருதரப்பான அமெரிக்க இராணுவ நடவடிக்கையெனும் பகிரங்க மிரட்டலை விடுத்தார். ட்ரம்பும் இதே நிலைப்பாட்டை வியாழக்கிழமை இரவு தனது Mar-a-Lago உல்லாச விடுதியில் இருந்து ஊடகங்களுக்கு விடுத்த ஒரு அறிக்கையில் மீண்டும் கூறினார்.

**இரசாயனத் தாக்குதலாக சொல்லப்படும் ஒன்றிற்கு யார் பொறுப்பு என்றவழக்கு, ஒருவீதிச்சண்டையை புலனாய்வு செய்ய நியூயோர்க் பொலிஸ்துறைஎடுத்துக்கொள்கின்ற கால நேரத்தை விடவும் குறைவான காலத்தில் “தீர்வு காணப்பட்டுள்ளது.” தீர்ப்பும் வந்து விட்டது தண்டனையும்இப்போதுநிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது**

எந்த இரசாயனத் தாக்குதலுக்கும் பொறுப்பாகவில்லை என சிரிய அரசு மறுத்திருப்பதை வெள்ளைமாளிகையும் ஊடகங்களும் ஒட்டு மொத்தமாய் நிராகரித்திருக்கின்றன, சிரியாவில் இருக்கும் அல் கெய்தா சக்திகள் இரசாயன ஆயுதங்களது தாக்குதலை நடத்திவிட்டு பழியை அரசாங்கத்தின் மீதுதூக்கிப்போடும்செயல்வரலாறுக்கும் இதே நிராகரிப்புதான்.

இரசாயனத் தாக்குதலாக சொல்லப்படும் ஒன்றிற்கு, யார் பொறுப்பு என்ற வழக்கு, ஒரு வீதிச் சண்டையை புலனாய்வு செய்ய நியூயோர்க் பொலிஸ் துறை எடுத்துக் கொள்கின்ற கால நேரத்தை விடவும் குறைவான காலத்தில் “தீர்வு காணப்பட்டுள்ளது.” தீர்ப்பும் வந்து விட்டது தண்டனையும் இப்போது நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த தடயவியல் துரித நடவடிக்கையை ஆப்கானிஸ்தான், ஈராக் மற்றும் ஜேர்மனில் வான்தாக்குதல்களில் நூற்றுக்கணக்கான அப்பாவிமக்கள் கொல்லப்படும் போது பயன்படுத்தப்படுகின்ற வழிமுறைகளுடன் ஒருவர் ஒப்பிட்டுப் பார்க்கலாம். அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதற்கு எந்த உறுதியான ஆதாரமும் இல்லை என்றே பென்டகன் வழக்கமாய் சொல்லுகிறது. ஒரு விசாரணையை தவிர்க்கமுடியாது என்று ஆகின்ற சந்தர்ப்பங்களில், அது பொதுவாக பல வாரங்கள் எடுத்துக் கொண்டு அந்தப் படுகொலையை மறைப்பதாக இருக்கிற அல்லது இறந்தோரின் உண்மையான எண்ணிக்கையில் சிறிய தொகையை மட்டுமே செய்தியாக அளிக்கின்ற ஒரு அறிக்கையை அது வெளியிடுகிறது.



இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டதாகச் சொல்லப்படும் இடத்திற்கு 200 மைல் கூட மிகாதவொரு தூரத்தில், மொசூல் நகரத்தில், அமெரிக்கா நூற்றுக்கணக்கில் ஈராக்கிய ஆண், பெண், குழந்தைகளை கொன்றுகுவித்திருக்கிறது, வெடிகுண்டுகளையும் ஏவுகணைகளையும் கொண்டு ஒட்டு மொத்த குடும்பங்களையும் புதைத்திருக்கிறது, ஒட்டுமொத்த நகரக் கட்டுமானங்களையும் அழித்திருக்கிறது. இந்தத் தாக்குதல்களுக்கெல்லாம் பின்னர் இறந்தவர்கள் உடல் துண்டாகிக் கிடப்பதையோ உடல் பாகங்கள் சிதறிக் கிடப்பதையோ குறித்த எந்த செய்திக் காட்சியையும் அமெரிக்க பெருநிறுவன ஊடகங்கள் ஒளிபரப்புவதில்லை என்று சொல்லவும் அவசியமில்லை. சிரியாவில் இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டதாகச் சொல்லப்படுவது குறித்து முதலைக்கண்ணீர் வடிக்கின்ற இந்தத் தொலைக்காட்சி செய்தித் தொகுப்பாளர்கள் எவரும் அமெரிக்க இராணுவத்தால் கொல்லப்பட்டோருக்காக ஒரு துளியேனும் தார்மீகக் கோபத்தை கொண்டுவர முடிந்தது கிடையாது.

**படுபயங்கர முன்னுதாரணங்களை குறித்து ஊடகங்கள் மூச்சு விடுவதில்லை**

அமெரிக்காவின் நீண்டகாலமாய் திட்டமிடப்பட்டு வந்திருக்கும் ஒரு இராணுவத் தலையீட்டை தொடக்குவதற்கான ஒரு இட்டுக்கட்டப்பட்ட சாக்கே சிரிய சம்பவம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. சிரியாவில் நாசவேலைகளுக்கும் அல்கெய்தாவைச் சுற்றி அமைந்திருக்கக் கூடிய அமெரிக்க பினாமிப் படைகளுடனான ஒத்துழைப்பிற்கும் பொறுப்பாக இருக்கும் சிஐஏவின் பிரிவு தான், இட்லிப்பில் என்ன நடந்தது என்பதைக் கண்டறிய வேண்டுமாயின் புலனாய்வு செய்ய வேண்டிய முதல் இடம் ஆகும்.

உத்தியோகபூர்வக் கதையை மறுப்பதற்கு நேரம் அதிகமாய் செலவிட அவசியப்படுவதில்லை என்ற இந்த இடத்திற்கு நாம் முன்னரே பலமுறை வந்தடைந்திருக்கிறோம். 14 ஆண்டுகளுக்கு முன்பு இதே போன்று பேரழிவு ஆயுதங்கள் குறித்த பொய்களைக் கூறி அமெரிக்கா ஈராக் மீது போர் நடத்தி, ஒரு மில்லியனுக்கும் அதிகமான உயிர்களைக் காவு வாங்கி இன்னும் மில்லியன்கணக்கான மக்களை அகதிகளாக மாற்றிய ஒரு பாரிய படுகொலைக்குக் காரணமாகியது. 2011 இல்லிபியாவில் ஆட்சி மாற்றத்திற்காக வேண்டி நடத்தப்பட்ட அமெரிக்க-நேட்டோ போருக்குமான சாக்கையும் இதேபோன்ற பொய்களே வழங்கின.

இந்த படுபயங்கர முன்னுதாரணங்களைக் குறித்து ஊடகங்கள் மூச்சு விடுவதில்லை. அதேபோல இந்த புதிய அமெரிக்கப் போரானது அல்கெய்தாடன் கூட்டு வைத்துத்தான் நடத்தப்படுகிறது என்பது குறித்தும் கோடு காட்டுவதும் கூட கிடையாது. ஈராக் போரின் போதான உடனிணைந்த செய்திசேகரிப்பு நாள்கள் எல்லாம் இப்போது கிட்டத்தட்ட வழக்கொழிந்தது போலாகி விட்டது. சுதந்திரமான செய்தி சேகரிப்பு என்பதன் மிகச் சிறிய நடிப்பையும் கூட ஊடகங்கள் விட்டொழித்து விட்டன.

அமெரிக்காவின் ஆளும் சிலரணியானது மத்திய கிழக்கிலான தனது மேலாதிக்கத்தை கட்டிக்காக்கவும் தனது பிராந்திய மற்றும் உலக எதிரிகளுக்கு எதிராக, குறிப்பாக ஈரான் மற்றும் ரஷ்யாவுக்கு எதிராக, நெருக்கித் தள்ளுவதற்கும் இராணுவ மூர்க்கத்தின் இன்னுமொரு பிரசாரத்திற்குக் கோரியது.

**ஈராக் படையெடுப்பைப் போலவே, சிரியாவுக்கு எதிரான தலையீடு ஒரு போர்க் குற்றமாகும்**

ஈராக் படையெடுப்பைப் போலவே, சிரியாவுக்கு எதிரான தலையீடு ஒரு போர்க் குற்றமாகும். அசாத் ஆட்சியைக் கவிழ்த்து அமெரிக்காவின் ஒரு கைப்பாவை ஆட்சியை அமர்த்தும் நோக்கத்துடன் அமெரிக்காவே தூண்டிவிட்டு, ஆயுதமளித்து, நிதியாதாரமளித்த ஒரு உள்நாட்டுப் போரில்தான் அது இப்போது தலையீடு செய்து கொண்டிருக்கிறது. இஸ்லாமிய பினாமிப் படைகளைக் கொண்டு இந்த நோக்கங்களை சாதித்துக் கொள்ளும் முயற்சியானது கிட்டத்தட்ட ஒரு மில்லியன் உயிர்களைக் காவுகொண்டு ஐந்து மில்லியன் சிரிய மக்களை அகதிகளாக்கிய பின்னர் தோல்வி கண்டு விட்டிருக்கிறது. அசாத்திற்கு ரஷ்யாவும், ஈரானும் ஆதரவாய் இருந்தது மட்டுமே இந்தத் தோல்விக்குக் காரணமில்லை, மாறாக பெரும்பான்மையான சிரிய மக்கள் அல்கெய்தாவுடன் தொடர்புடைய அமெரிக்க-ஆதரவுக் கூறுகள் விடயத்தில் உணர்ந்த அச்சமும் வெறுப்பும் கூட காரணமாகும்.

ட்ரம்ப் நிர்வாகம் தனது நிலைப்பாட்டில் எடுத்திருக்கும் இந்த ஒரேயடியான மாற்றமானது அமெரிக்க முதலாளித்துவ ஆளும் வர்க்கத்திற்குள்ளாக போருக்கு ஆதரவாக எழுந்திருக்கும் ஒரு தீவிரமான அழுத்தத்தின் அளவுகோலாக இருக்கிறது. கூறப்படும் இந்த சம்பவம் இட்லிப்பில் நடப்பதற்கு சில நாள்களுக்கு முன்பாக, சிரியாவில் அசாத்தின் ஆட்சி என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒரு நிதர்சனமாக இருந்ததாக நிர்வாகத்தின் அதிகாரிகள் கூறிக் கொண்டிருந்தனர். ட்ரம்பே கூட சிரிய விவகாரத்திலான ஒபாமா நிர்வாகத்தின் கொள்கையில் தனக்கு உடன்பாடில்லை என்பதை தொடர்ந்தும் வலியுறுத்தி வந்திருந்தார், அங்கே ISIS உடன் சண்டையிடுவது மட்டுமே அமெரிக்காவின் ஒரே நோக்கமாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார்.

ஜனநாயகக்கட்சியினரும்ஜனநாயகக் கட்சியுடன் இணைந்த நியூ யோர்க் டைம்ஸ் போன்ற ஊடகங்களும் துல்லியமாக இந்தப் பிரச்சினை தொடர்பாக, அதாவது சிரிய அரசாங்க விடயத்தில், இன்னும் முக்கியமாய், அதன் பிரதான கூட்டாளியான ரஷ்யா விடயத்தில் மென்மையாக நடந்து கொள்வதாக சொல்லப்படுவது குறித்தே, ட்ரம்புக்கு கடுமையான கண்டனங்களைத் தெரிவித்து வந்திருக்கின்றன.

(கேள்வி தொடரும்...)

# சிறுவர்களைப் பெற்றோர்களுடன் வாழும் சூழலை ஏற்படுத்துங்கள்

## சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களுக்கு நியமனக்கடிதம் வழங்கும் நிகழ்வில் சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம்



சிறுவர்கள் அவர்களின் பெற்றோருடன் வாழுவதற்கான சூழலை ஏற்படுத்துங்கள். அதுவே சிறுவர்களுக்கான சிறந்த சூழலாகும் என வடக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவம் மற்றும் சிறுவர் நன்னடத்தை அமைச்சர் வைத்திய கலாநிதி பத்மநாதன் சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார். சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:- .

யுத்தத்திற்கு பின்னர் பல சிறார்கள் தங்களது தாய், தங்கையர்களை இழந்து சிறுவர் இல்லங்களில் வாழ்ந்து வருகின்றார்கள். இது மிகவும் கொடுமையானது. நாங்கள் எவ்வாறான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தாலும் அவர்கள் தங்களுடைய பெற்றோர்களுடன் வாழுவதை போன்றதொரு சந்தோஷம் இருக்காது.

சிறுவர்கள் வாழ்வதற்கான சிறந்த சூழல் அவர்களது வீடுகள்தான் எனினும் சில பெற்றோர் கள் பிள்ளைகளை சுமைகளாகக் கருதி சிறுவர் இல்லங்களில் சேர்ப்பதற்கு முயற்சிக்கிறார்கள். இது தவறான அணுகுமுறையாகும். ஆகவே நீங்கள் இயலுமான வரை பிள்ளைகளை அவர்களின் பெற்றோர்களுடன் வாழுவதற்கான சூழலை ஏற்படுத்திக்கொடுங்கள்.- என்றார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சுகாதார அமைச்சரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த நிகழ்வில் 7 சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களுக்கான நியமனக்கடிதங்கள் அமைச்சரால் வழங்கி வைக்கப்பட்டது. இவர்களில் வவுனியா மாவட்டத்திற்கு ஒருவரும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 2 பேரும், மன்னார் மாவட்டத்திற்கு 4 பேரும் முதற்கட்டமாக நியமனம் பெற்றுள்ளார்கள். இந்த நிகழ்வில் சுகாதார அமைச்சின் செயலாளர் திருவாகரன், உதவிச் செயலாளர் சுஜீவா, சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் விஸ்வரூபன் உட்பட அமைச்சின் உத்தி யோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

# நாளை மின்தடை

யாழ்ப்பாணம், ஏப்.21

நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் 6.30 மணி வரை யாழ். பிரதேசத்தில் நெடுந் தீவுப் பிரதேசத்திலும்-

வவுனியா பிரதேசத்தில் புகையிரத நிலைய வீதி, நம்பைக்குளம், சூசைப்பிள்ளையார்குளம், பூங்கா வீதி, கண்டி வீதி (ஏ9 வீதி), 1 ஆம் மற்றும் 2 ஆம் குறுக்குத்தெரு, மதவுவைத்த குளம், மூன்றுமுறிப்பு, தவசிக் குளம், குட்செட் வீதி, தோணிக்கல், பண்டாரிக்குளம்,

ஈரப்பெரியகுளம், வேரகம, கற்குண்டமடு, அலுத்கம, அழ கல்ல, பகல அமுத் வத்த, புபுதுகம, குருந்துப் பிட்டிய, புதிய பஸ் தரிப்பிடத்திலிருந்து (ஏ9 வீதி) ஊடாக நெளுக்குளம் ஊடாக நேரிய குளம் வரை, நெளுக்குளத்திலிருந்து பம்பைமடுவரை, ஓமேகாலைன், UNHCR குருமன்காடு, கந்தசாமி நகர், நித்திக்குளம், சண்முகபுரம், கங்கன்குளம், இலுப்பைகுளம், அழகாபுரி, துட்டுவாகை, செட்டிகுளம் நகரம், சின்னசிப்பி குளம், முதலியார்குளம், கப்பாச்சி, முகத்தாங்குளம், அரசடி குளம், காந்திநகர்,

அரசன்குளம், வலயம் 06, இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், கஜசிங்கபுர இராணுவ முகாம், செட்டிகுளம் வைத்தியசாலை, வவுனியா தொழில்நுட்பக்கல்லூரி, பம்பைமடு பல்கலைக்கழகம், அரசன் அரிசி ஆலை, சியாம் அரிசி ஆலை, ஸ்ரீரங்கம் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, சுயன் அரிசி ஆலை, அஸ்வி அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, பூ-ஓயா படை முகாம், ஈரப்பெரியகுளம் படை முகாம், ஈரப்பெரியகுளம் SLBC, கார்கில்ஸ் புட் சிற்றி, மண்டெரின் ஆடைத்தொழிற்சாலை, Kowloom ஆடைத்தொழிற்சாலை, குளோப் அரிசி ஆலை, 2Vir படை முகாம், லங்கா அரிசி ஆலை, SVR அரிசி ஆலை, ஓவியா விடுதி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், வவுனியா பொது வைத்தியசாலை ஆகிய இடங்களிலும் -

மன்னார் பிரதேசத்தில் வட்டக்கண்டல், குருவில் ஆகிய இடங்களிலும் மின் சாரம் தடைப்படும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)



கொலன்னாவைப் பகுதியில் குப்பை மேடு சரிந்து வீழ்ந்ததில் பலபொதுமக்கள் உயிரிழந்ததுடன் மேலும் பலர் காணாமல் போயுள்ளனர். இவ் அனர்த்தத்தில் உயிரிழந்த பொதுமக்களுக்கு சாவகச்சேரிப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினர் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் வைத்து மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர். இந் நிகழ்வு சாவகச்சேரி இளைஞர் கழக சம்மேளன தலைவர் நக்கீரன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் இளைஞர்சேவைகள் அதிகாரி அ.குனேஸ், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் அருட்கரன் மற்றும் தென்மராட்சி பிரதேச இளைஞர் கழக இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டு உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி வழிபட்டனர். (உ-2)

# புத்தாண்டு போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஏப்.21

யாழ்.கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் புத்தாண்டு விழா போட்டிகளுக்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மரதன் ஓட்டப்போட்டி (ஆண், பெண்) பொது அறிவுப் போட்டி ஆகியவற்றுக்கு விண்ணப்பிக்கலாம்.

ஜே/81, ஜே/83 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், க.பொ.த. (சா.த) பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், பல்கலைக்கழக அனுமதி கிடைத்தவர்கள் ஆகியோருக்கு இந்த நிகழ்வில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் கலைஞர், சமூக சேவையாளர்களும் 'சமூகதிலகம்' விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

யாழ்.மாவட்டத்துக்கு உட்பட்ட போட்டியாளர்கள் தலைவர் நா. தனேந்திரனுடன் 0776146253 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம். (ஐ-19)

## சத்யசாயி பாபாவின் ஆராதனை மஹோற்சவம்


பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் ஆராதனை மஹோற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட் கிழமை பருத்தித்துறை சத்யசாயி சேவா நிலையத்தில் அதிகாலை 5.15 மணிக்கு ஆரம்பமாகும்.

முற்பகல் 11.30 மணிக்கு மனித மேம்பாட்டுக் கல்வி செயலமர்வை வைத்திய கலாநிதி எஸ்.சிவசங்கர் நடத்தவுள்ளார். சாயியின் அவதார மகிமை உரையை வட பிராந்திய சத்ய சாயி சேவா ஆன்மீக இணைப்பாளர் எஸ். சிவோதயன் வழங்கவுள்ளார்.

## மஹோற்சவம்

மாதகல் - நுணசையம்பதி முருகமூர்த்தி ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 29 ஆம்திகதி சனிக்கிழமை முற் பகல் 11.30 மணிக்குக்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

பன்னிரண்டு தினங்கள் நடைபெறும் திருவிழாவில், எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.



மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்த விபத்தில் உயிரிழந்த மக்களுக்கு வவுனியாவிலும் அஞ்சலி.

உயிரிழந்த மக்களின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையும், அஞ்சலி நிகழ்வும் வவுனியா புளியடி பிள்ளையார் ஆலயத்தில் நேற்று காலை இடம்பெற்றன. புளியடி ஆலய பரிபாலன சபை, தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பு மற்றும் மாவட்ட அந்தணர் ஒன்றியம் ஆகியன இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், அரச அதிபர் ரோஹண புஷ்பகுமார, வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தம், சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.வாசன், தமிழ் மணி அகளங்கன், தமிழ் விருட்சம் தலைவர் செ.சந்திரகுமார், அந்தணர்கள், வர்த்தகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஐ-100)

# புத்தக தினத்தை முன்னிட்டு எழுத்தாளர்களது உரைகள்

யாழ்ப்பாணம், ஏப்.21

உலக புத்தக தினத்தை முன்னிட்டு யாழ். பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் 'நானும் எனது புத்தகமும்' என்னும் தலைப்பில் நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை 3.45 மணிக்கு நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும் இந்த நிகழ்வில் எழுத்தாளர்கள் உரைகள் இடம்பெறவுள்ளன.

எழுத்தாளர் அ.யேசுராசா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் 'பர்மியப் பிக்கு சொன்ன கதைகள்' என்னும் மொழியாக்க நூலைப் பற்றி சோ. பத்மநாதனும், ''இப்படி ஆயிற்று நூற்றியோராவது தடவையும்' என்னும் கவிதை நூல் பற்றி ந. சத்தியபாலனும், 'ஒரு மரணமும் சில மனிதர்களும்' என்னும் சிறு கதை நூல் பற்றி செல்வி தட்சாயணியும், 'அமைதிப் பூங்கா' என்னும் சிறுவர் நாடக நூல் பற்றி யோண்சன் ராஜ்குமாரும், 'தனித்துத் தெரியும் திசை' என்னும் ஆய்வு நூல் பற்றி த. அஜந்தகுமாரும், 'கொலஸ்ரோலைக் கட்டுப்படுத்துவது எப்படி' என்ற நூல் பற்றி மருத்துவர் எம்.கே. முருகானந்தனும் உரையாற்றவுள்ளனர். (ச)

## ஆன்மீக ஆளுரை

யாழ். சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யவால் நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை ஆன்மீக அருளுரை நடத்தப்பட்டு வருகின்றது. இதில் இன்று வெள்ளிக்கிழமை 'ஆசையை நீறாக்கிய ஞான அக்னி' என்னும் தலைப்பில் ஆன்மீக அருளுரை இடம்பெறும். (ச)

# இந்தியாவுக்கு எண்ணெய்தாங்கிகள் விற்றால் விளைவுகள் விபரீதமாகும்!

## கனியவள எண்ணெய் தொழிற்சங்கம் எச்சரிக்கை



கொழும்பு, ஏப்.21

திருகோணமலைஎண்ணெய் களஞ்சிய வளாகத்தை இந்தியாவுக்கு எந்த நிபந்தனைகளும் இல்லாமல் கையளிக்கும் திட்டம் ஒன்று உள்ளது. இது தொடர்பான உடன்படிக்கை எதிர்வரும் 28 ஆம் திகதி கைச்சாத்தாக உள்ளது. அது கைச்சாத்தானால் விளைவுகள் விபரீதமாகும்என்று கனிய, எண்ணெய் தொழிற்சங்கம் எச்சரித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே எண்ணெய் தொழிற்சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் டி.ஜே. ராஜகருணா இதனைத்தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

திருகோணமலையில் 101 எண்ணெய் தாங்கிகள் நிர்மாணிக்கப்பட்டன. அவற்றில் பாவிக்கக்கூடிய நிலையில் தற்போது 99 எண்ணெய் தாங்கிகள்காணப்படுகின்றன. இந்த எண்ணெய் தாங்கிகள் மூலம் 10 லட்சம் ரூபா வருமானம் பெறக்கூடும். 2016ஆம் ஆண்டு முன்வைத்த அமைச்சரவை பத்திரத்தில் இந்த எண்ணெய் தாங்கிகள் தொடர்பாக அமைச்சர் சந்திம வீரக்கொடி தெளிவுபடுத்தி இருந்தார்.

இவ்வாறு திருகோணமலையில் உள்ள அரசுக்குச்சொந்தமான அனைத்து எண்ணெய் தாங்கிகளையும் இந்திய பெற்றோலிய நிறுவனத்தால் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த மாதம் 28ஆம் திகதி திருகோணமலையில் அனைத்து எண்ணெய் தாங்கிகளையும் இந்தியாவுக்கு விற்பதற்கானஒப்பந்தம்ஒன்று கைச்சாத்திடப்பட உள்ளது.

இதற்கு நாம் முழுமையான எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம். இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் விளைவுகள் விபரீதமாகும். நாம் நாடு தழுவிய ரீதியில் வேலை நிறுத்தத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

இதை விற்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை. இவற்றிற்கு மக்களே உரிமையானவர்கள். ஆகவே, நாம் மக்கள் பக்கமே இருக்கின்றோம்.

நாம் வேலை நிறுத்தத்தை முன்னெடுத்தால் நாடு பெரிய பிரச்சினையை எதிர்கொள்ள நேரிடும். நாம் அரசுக்கு எதிராக ஒன்றிணையவில்லை, மக்கள் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கே ஒன்றிணைகின்றோம்.

இலங்கையில் உள்ள எண்ணெய் தாங்கிகளை இந்தியாவுக்குவிற்பதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட் டோம்.- என்றார். (எ)

## மகப்பேற்று விடுமுறையை அதிகரிப்பது குறித்து ஆலோசனை

பெண்களுக்கான மகப்பேற்று விடுமுறையை அதிகரிப்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது என பொது முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

வேலைக்குச்செல்லும்பெண்களுக்கு மகப்பேற்று விடுமுறைக்காலம் குறைவாக இருப்பதால், அவர்கள் தொழிலில் இருந்து விலகும் நிலை காணப்படுகிறது. இந்தநிலையில், மகப்பேற்று விடுமுறையை அதிகரிப்பதன் ஊடாக, பெண்களைத் தொடர்ந்து தொழிலில் நிலைபெறச் செய்ய முடியும் என்று எதிர்பார்ப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)

# சீனாபோல் இலங்கையிலும் கூட்டுறவுக் கிராமங்கள்!

## கைத்தொழில் அமைச்சருக்கும் சீனப் பிரதிநிதிக்கும் இடையே பேச்சு



சீனாவில் உள்ளதைப் போன்று கூட்டுறவு கிராமங்களை இலங்கையிலும் ஏற்படுத்துவது தொடர்பில் சீன கூட்டுறவு பிரதான சங்கத்தின் தலைவரும், சர்வதேச கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவருமான லீ சுங் செங்குக்கும், கைத்தொழில், வணிகத்துறை அமைச்சருமான றிஷாத் பதியுதீனுக்கும் இடையில் நேற்று முன்தினம் சந்திப்பு ஒன்று இடம் பெற்றுள்ளது.

வியட்நாமில் நடைபெறும் ஆசிய பசுபிக் நாடுகளின் அமைச்சர்களின் மாநாட்டு நிகழ்வை அடுத்து இந்தச் சந்திப்பு, ஹனோயில் அமைந்துள்ள ஹோட்டல் மிலீயாவில் இடம்பெற்றது.

குறிப்பாகச்சீனா அரசு இலங்கையுடன் மிக நெருக்கமாகச் செயற்பட்டு வருகின்றது எனவும், எதிர்காலத்தில் கூட்டுறவு துறையின் வளர்ச்சிக்கு பல்வேறு வகையிலும் உதவிகளை அது வழங்கவுள்ளது எனவும் இரு தரப்பு பேச்சின் போது கூறப்பட்டது.

2004 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட சுனாமி சீற்றத்தை அடுத்து, அந்தமக்களது வாழ்வாதார மற்றும் அவசர தேவைகளுக்காக சீனக் கூட்டுறவு சங்கம் உதவியது என சர்வதேச கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இலங்கை கூட்டுறவு ஆணையாளர் சுலைமான் லெப்பை நசீர், தேசிய கூட்டுறவு கவுன்சிலின் செயலாளர் அசன்க ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். (எ)

# எந்தத் தேர்தலையும் எதிர்கொள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தயார்!

## மேல்மாகாண முதலமைச்சர் இசுறுதேவப்பிரிய தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.21

எத்தகைய தேர்தல்களையும் வெற்றிகரமாக எதிர்கொள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாராகவே உள்ளது என மேல் மாகாண முதலமைச்சர் இசுறுதேவப்பிரிய தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் 'சிராவஸ்தி'யில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசு இவ்வருடத்தில் மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் நடத்துவதும் உறுதி. எவராலும் அரசை வீழ்த்த முடியாது.

எவர், எத்தகைய கருத்துக்களை வெளியிட்டாலும் தற்போதைய நல்லாட்சி அரசை எவராலும் வீழ்த்த முடியாது. எதிர்வரும் செப்ரெம்பரில் மூன்று மாகாண சபைகள் கலைக்கப்படவுள்ளன. அந்த மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல் மற்றும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலும் இந்த வருடத்தில் நடத்தப்படும்.

மாகாண சபைகளுக்கான தேர்தல்களை ஒத்திப் போட முடியாது என்பதால் அந்த தேர்தல்கள் நடத்தப்பட்ட பின் உள்ளூராட்சிச்சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படும். இதுவே அரசின் தீர்மானமாகும். எனினும் சிலவேளைகளில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் முதலில் நடைபெறலாம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கிராம மட்டத்திலிருந்து சகல மட்டங்களிலும் பலப்படுத்தப்பட்டுள்ளது. தொகுதி அமைப்பாளர்களுக்கு கட்சியால் இலக்குகள் வழங்கப்பட்டுள்ளன. அந்த இலக்கை வெற்றி கொள்ள அவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியுள்ளது.

மே தினத்தைப் பொறுத்தவரை கண்டி மற்றும் கொழும்பைத் தவிர ஏனைய ஒவ்வொரு தொகுதி அமைப்பாளரும் 500 பேரை மேதினத்துக்கு அழைத்து வரும் பொறுப்பை ஏற்றுள்ளனர்.

அதேபோன்று கூட்டு எதிர்க்கட்சியினர் எந்த நேரத்திலும் எம்மோடு இணைந்து செயற்படலாம், அதற்கானகதவுகள் திறந்துள்ளன. எந்தத் தேர்தலிலும் அவர்கள் எம்மோடு இணைய முடியும். இம்முறை மேதினத்தில் கூட அவர்கள் இணையலாம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரிக்கும் சகலரையும் இணைத்துக் கொண்டு முன்செல்வதே கட்சியினதும் தலைமையினதும் நோக்கமாகும்.- என்றார். (எ)

## மீதொட்டமுல்ல அனர்த்தத்தில் பாதித்தோருக்கு ஜப்பான் உதவி



கொழும்பு, ஏப்.21

மீதொட்டமுல்லவில் இடம்பெற்ற அனர்த்தத்தின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஜப்பான் விசேட, அத்தியாவசிய ஒரு தொகை நிவாரணத்தை நேற்றுமுன் தினம் விமானத்தின் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளது.

இலங்கையிலுள்ள ஜப்பான் நாட்டுக்கான தூதுவர் கொனிச்சி சுகனுமாவினால் இந்தப் பொருள்கள் இடர்முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவிடம் கையளிக்கப்பட்டது.

நுளம்பு வலைகள், மெத்தைகள், நீர் சுத்திகரிப்புக்கான இயந்திரங்கள், நீர்எடுத்துச்செல்வதற்கான உபகரணங்கள், மின்பிறப்பாக்கிகள், விளக்குகள் உள்ளிட்ட பல பொருள்கள் இதில் அடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# தமிழக விவசாயிகள் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது!

கடந்த 37 நாள்களாகத் தமிழக விவசாயிகள் முன்னெடுத்து வந்த போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

மத்தியஇணைஅமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை விவசாயிகளை நேரில் சந்தித்து போராட்டத்தைக் கைவிடுமாறு வலியுறுத்தியிருந்தார். இந்நிலையில், போராட்டத்தை தற்காலிகமாக கைவிடுகின்றோம் என விவசாயிகள் அறிவித்துள்ளனர்.

நாளை சனிக்கிழமை கோரிக்கைகளை நிறைவேற்றுவது தொடர்பில் மத்திய அமைச்சரிமிருந்து அதிகாரபூர்வ கடிதம் வரவில்லை என்றால், போராட்டம் மீண்டும் தீவிரமடையும் என்று போராட்ட ஒருங்கிணைப்பாளர் அய்யாக்கண்ணு அறிவித்துள்ளார்.

வறட்சி நிவாரணம், பயிர்க்கடன் தள்ளுபடி உள்ளிட்ட பலகோரிக்கைகளைவலியுறுத்தி தமிழக விவசாயிகள் கடந்த 37 நாள்களாக டில்லி ஜந்தர் மந்தர் பகுதியில் போராட்டங்களை முன்னெடுத்து வந்தனர். எலிக் கறி உண்ணும் போராட்டம், பாம்புக் கறி உண்ணும் போராட்டம், தாலி அறுக்கும் போராட்டம், வளையல் உடைக்கும் போராட்டம் என ஒவ்வொரு நாளும் வித்தியாசமான போராட்டங்களை நடத்தி வந்த விவசாயிகள், போராட்டத்தின் உச்சமாக நிர்வாணப் போராட்டத்தையும் முன்னெடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# கட்சியில் இருந்து சசிகலா குடும்பம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்!

## பன்னீர் அணி வலியுறுத்து

பிரமாண பத்திரத்தைத் திரும்பப் பெற்று சசிகலா குடும்பத்தைக் கட்சியில் இருந்து முழுமையாக நீக்க வேண்டும். சசிகலா குடும்பத்தைச் சேர்ந்த 30 பேரும் நீக்கப்பட்டனர் என்ற அதிகாரபூர்வ அறிவிப்பு வேண்டும்.

-இவ்வாறு ஓ.பன்னீர் செல்வம் அணியின் கே.பி.முனுசாமி வலியுறுத்தியுள்ளார்.

அ.தி.மு.க.வின் இரு அணிகளையும் இணைப்பது தொடர்பாக ஓ.பன்னீர் செல்வம் தனது ஆதரவு அமைச்சர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் நேற்று வியாழக்கிழமை காலை ஆலோசனைக் நடத்தினார். ஆலோசனை கூட்டத்துக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத்தெரிவிக்கையிலேயே முனுசாமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தினகரனை வெளியேற்றி நாடகம் நடத்துகின்றனர். சசிகலா குடும்பத்தினர் நாடகத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்கின்றனர். கட்சியில் இருந்து சசிகலா, தினகரன் இருவரையும் வெளியேற்றுவதை அறிக்கையாகத் தர வேண்டும். அமைச்சர்கள்தான்தோன்றித்தனமாக பேசுகிறார்கள். சசிகலாகுடும்பத்தின் முதலமைச்சராக பழனிசாமி உள்ளார். மக்கள் செல்வாக்கு இல்லாத அணியாக சசிகலா தரப்பினர் உள்ளனர். அவமானப்படுத்திவிட்டு இப்போது பேச்சுக்கு அழைக்கிறார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள்கட்டாயத்தின்பேரில் தான் மாற்று அணியில் உள்ளனர். முதல மைச்சர் உள்ளிட்ட பதவிகளை நாங்கள் கேட்கவில்லை. மக்கள் செல்வாக்குள்ள ஒரே தலைவர் பன்னீர் செல்வம் மட்டும்தான்.

மறைந்தமுதல்வர்ஜெயலலிதாவின் மர்ம மரணம் தொடர்பாக மத்திய புலனாய்வுத்துறையின் விசாரணைக்கு மாநில அரசை வலியுறுத்த வேண்டும், கட்சியில் இருந்து சசிகலாமற்றும்அவரது குடும்பத்தினரை நீக்க வேண்டும் என்று இரண்டு முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்தித் தான் பன்னீர் செல்வம் தர்ம யுத்தத்தை தொடக்கினார். முன்வைத்த இரண்டு கோரிக்கைகளையும் நிறைவேற்றினால் பேச்சுக்கு முன்வருவோம்.-என்றார். (ச)

# குடிதண்ணீர் வழங்குமாறு கோரி ஸ்ரீவில்லிபுத்தூரில் வீதி மறியல்!



ஸ்ரீவில்லி புத்தூர், ஏப்.21

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் குடிதண்ணீர் வழங்குமாறு வலியுறுத்தி அப்பகுதி மக்கள் நேற்று வியாழக்கிழமை திடீர் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் இந்தப் பகுதியில் சுமார்ஒரு மணித்தியாலம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மம்சாபுரம்பேரூராட்சி, காந்திநகர், நரையன்குளம் பகுதியில் சுமார் 500 குடும்பத்தினர் வசிக்கின்றார்கள். இப் பகுதிகளுக்கு பல நாள்களாகக் குடிதண்ணீர்வரவில்லை. இது தொடர்பில் பேரூராட்சி செயல் அலுவலர் ஜெயச்சந்திரசேகரிடம் பல முறை கிராம மக்கள் முறையிட்டுள்ளார்கள். ஆனால், அவர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் காவல் ஆய்வாளர் ஜெ.மகேஸ்குமார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தார். மேலும் செயல் அலுவலரை சம்பவ இடத்துக்கு வரவழைத்து, கிராம மக்களுடன் காவல் ஆய்வாளர் பேச்சு நடத்தினார்.

உடனடியாக குடிதண்ணீர் வரும் பாதையில் உள்ள அடைப்புகள் சீர்செய்யப்படும் என்று அலுவலர்கள் உறுதியளித்தனர். இதனையடுத்து, பணிகள் உடனே தொடங்கப்பட்டன. இந்நிலையில், வீதி மறியல் விலக்கிக் கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# ஆளுநருடனான சந்திப்பில் அரசியல் எதுவும் இல்லை!

## துணை சபாநாயகர் தம்பிதுரை தெரிவிப்பு



சென்னை, ஏப்.21

ஆளுநருடனான சந்திப்பில் அரசியல்விடயங்கள் எவையும் பேசப்படவில்லை. மரியாதை நிமித்தமாகவே சந்தித்தேன்.

-இவ்வாறு நாடாளுமன்ற துணை சபாநாயகர் தம்பிதுரை தெரிவித்தார்.


தமிழக ஆளுநர் வித்யாசாகர் ராவை நாடாளுமன்ற துணை சபாநாயகர் தம்பிதுரைமற்றும்தமிழக நிதியமைச்சர் ஜெயக்குமார் ஆகியோர் நேற்று புதன்கிழமை சந்தித்தனர்.

இரு அணியினரும் ஒன்று சேர்வதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வரும் நிலையில், இந்தச் சந்திப்பை முக்கியத்துவம் வாய்ந்தது என அனைவரும் எதிர்பார்த்திருந்தனர்.

இந்த நிலையில், இது தொடர்பில் தம்பிதுரை கருத்துத் தெரிவிக்கையில்:-

ஆளுநர் எனது நண்பர். பல காலங்களாக எங்கள் நட்புத் தொடர்கிறது. நட்பு ரீதியாகவே சந்தித்தேன். அரசியல் எதுவும் இல்லை. ஆளுநரிடம் அரசியல் மற்றும் அணிகள் இணைப்பு விவகாரம் தொடர்பாக எதுவும் விவாதிக்கவில்லை.-என்றார். (ச)

# இந்தியாவின் அருணாச்சல பிரதேசத்தின் 6 இடங்களுக்கு பெயர் சூட்டியது சீனா!




இந்தியாவின் அருணாச்சல பிரதேசத்தை சொந்தம் கொண்டாடி வரும் சீனா, அந்த மாநிலத்தின் ஆறு இடங்களுக்கு அதிகார பூர்வமாகப் பெயர் சூட்டியுள்ளது.

அதன்படி, சீனமற்றும் ரோமானிய எழுத்துகளை கலந்து, Wo'gyainling, Mila Ri, Qoidengarbo Ri, Mainquka, Bumo La மற்றும் Namkapub Ri ஆகிய பெயர்களை அந்நாடு சூட்டியுள்ளது. இவை அனைத்தும் தெற்கு திபெத் என அழைக்கப்படும் என்றும் சீனா குறிப்பிட்டுள்ளது.

இந்தப் புதிய பெயர் வெளியீட்டுக்குப் பின்னர், விரைவில்வரைபடம் ஒன்றையும் சீனா வெளியிடலாம் எனக் கூறப்படுகிறது. ஏற்கெனவே, அருணாச்சல பிரதேசத்தை, தெற்கு திபெத் என்று உரிமை கோரும் சீனாவின் இந்த நடவடிக்கை இந்தியா - சீனா இடையிலான நட்புறவில் விரிசல்களை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர், திபெத் நாட்டைச் சேர்ந்த பௌத்த மதத் தலைவர் தலாய் லாமாவை, அருணாச்சலப் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்க இந்தியா அனுமதி அளித்தது. இதற்கு, சீனா கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தது.

அத்துடன், இதற்கான கடும் விளைவுகளை இந்தியா சந்திக்க நேரிடும் என்றும் சீனா எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில், இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ச)

# எச்சரிக்கை ஒலி எழுப்பும் விளக்கை அகற்றினார் தமிழக முதலமைச்சர்!



முதலமைச்சர்களும், அமைச்சர்களும் தங்கள் வாகனங்களில் உள்ள எச்சரிக்கை ஒலி எழுப்பும் விளக்குகளை அகற்ற வேண்டும் என்ற பிரதமர் நரேந்திரமோடியின்வேண்டுகோளை ஏற்றுத் தமிழக முதலமைச்சர் எடப் பாடி பழனிச்சாமி, தனது காரில் பொருத்தப்பட்டிருந்தசுழல் விளக்கை அகற்றினார்.

பிரதமர், மத்திய அமைச்சர்கள், முதலமைச்சர், மாநில அமைச்சர்கள் முக்கியப் பிரமுகர்கள் என இனங்காட்டுவதற்காக அவர்களின் கார்களில் எச்சரிக்கை ஒலி எழுப்பும் சிவப்புச்சுழல்விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கும். அனைவரும் சமம் தான் என்பதை வலியுறுத்தும்வகையில்இந்தச்சுழல் விளக்குகளைஅகற்றிவிட வேண்டும் எனப் பிரதமர் நரேந்திரமோடி வேண்டுகோள் விடுத்திருந்தார். இதை ஏற்றுப் பல மாநிலங்களிலும் முதலமைச்சர்கள் தங்கள் வாகனங்களில் உள்ள சுழல் விளக்குகளை அகற்றி வருகின்றனர்.

இந்நிலையிலேயே தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியும் தனது காரில் பொருத்தப்பட்டிருந்த சுழல் விளக்கை அகற்றியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# ஜெயலலிதாவுக்கு சொந்தமான பங்களா அருகில் தீ விபத்து!

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்குச் சொந்தமான சிறுதாவூர்பங்களாஅருகே தீ விபத்து ஏற்பட்டதால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் சிறுதாவூர் பகுதியில் ஜெயலலிதாவுக்குச் சொந்தமான பங்களா ஒன்று அமைந்துள்ளது. ஓய்வு எடுப்பதற்காக ஜெயலலிதா இங்கு அடிக்கடி வந்து தங்கிச் செல்வது வழக்கம். இந்நிலையில், சிறுதாவூர் பங்களா அருகில் உள்ள 9 ஏக்கர் புல்வெளியில்நேற்றுமுன்தினம் புதன்கிழமை திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. தீயணைப்புத் துறையினர் தீயை அணைத்தனர். இதனால் பங்களாவுக்கு எந்தச் சேதமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## வடகொரியாவை அழிக்க பெரிய வெடிகுண்டு தயாரித்த அமெரிக்கா

வடகொரியாவின் அணுசக்தி தொழிற்சாலைகளை அழிக்க அமெரிக்காபெரிய வெடிகுண்டு ஒன்றைத் தயார் செய்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்கஇராணுவத்தினர் கடந்த வாரம் ஆப்கானிஸ்தானின் ஐ.எஸ். தீவிரவாதிகள் முகாமிட்டிருந்த பகுதியை நோக்கி வெடிகுண்டுத்தாக்குதல் நடத்தினர். இதில் அமெரிக்கா, அன்னை வெடிகுண்டு என்று அழைக்கப்படும் வெடிகுண்டை பயன்படுத்தியது.

இந்தநிலையில்அமெரிக்கா சுமார் 14 ஆயிரம் கிலோ எடை கொண்ட பெரிய வெடிகுண்டு ஒன்றை, அமெரிக்காவின் துறைமுகம் ஒன்றில் வைத்து இரகசியமாக தயார் செய்துள்ளது என்று கூறப்படுகிறது.

# கொலம்பியாவில் மண் சரிவு: புதையுண்டு 16 பேர் உயிரிழப்பு

## பலரைக் காணவில்லை; மீட்புப் பணி தொடர்கிறது!



தென்அமெரிக்க நாடான கொலம்பியா தலைநகர் மனிஷேல்ஸ் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மண் சரிவில் சிக்கி 16 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காணாமல் போயுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

காணாமல்போனோரை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. இதில் 9 பேர் காயமடைந்தனர். 57 வீடுகள் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

சமீபத்தில் பெய்த கனமழையால் பல்வேறு பகுதிகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்தது. இதனாலேயே மண் சரிவு ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பில்கருத்து தெரிவித்த தேசிய அனர்த்த முகாமைத்துவ அமைப்பின் தலைவர் கார்லோஸ் இவான் மார்கேஸ்,

'காணாமற்போனோரை தேடும் பணிகளில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மனிதாபிமான உதவிகள் குறித்து உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வீட்டுத் திட்டங்கள் முக்கிய நோக்கமாக கொள்ளப்படும். பாதிக்கப்பட்ட இடங்களுக்கு ஜனாதிபதி ஜூவான் மனுவல் சான்ரோஸூடன் விஜயம் மேற்கொள்வோம்' என்றார்.

மேலும், பாதிக்கப்பட்ட சுமார் 500 குடும்பங்களுக்குத் தற்காலிக வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக தலா 52.3 அமெரிக்க டொலர்கள் நிதியுதவி அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த மாத ஆரம்பத்தில் அந்த நாட்டின் மொகோவா மற்றும் புட்டு மேயோ ஆகிய நகரங்களில் ஏற்பட்ட நிலச்சரிவில் 320 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். ஆயிரக் கணக்கானோர் தங்களது வீடுகளை விட்டு வெளியேறியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## சிரியா இரசாயன வாயுத் தாக்குதலில் 'சரீன்' வாயு பயன்படுத்தப்பட்டமை உறுதி

சிரியாவில் அண்மையில் நடத்தப்பட்ட இரசாயன தாக்குதலில், மனித உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் 'சரீன்' வாயு பயன்படுத்தப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சிரியாவின் இட்லிப் மாகாணத்தின் மத்திய பகுதியில் உள்ள கான் ஷெய்க்குன் நகரில் கடந்த 4ஆம் திகதி நடத்தப்பட்ட இரசாயனத் தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உட்பட 50இற்கும்அதிகமானோர் உயிரிழந்தனர்.

சிரிய அரசுக்கு ஆதரவானவிமானப்படையின் போர் விமானங்களே இந்தத் தாக்குதலை நடத்தின என்று ஆரம்பத்தில் கூறப்பட்டாலும் இதற்கான ஆதாரங்கள் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்த நிலையில் இந்தத் தாக்குதலின் பின்னணியைக் கண்டறிய ஐ.நா. சபை திட்டமிட்டிருந்தது.

தாக்குதலில் பாதிக்கப்பட்ட 10பேரிடம்எடுக்கப்பட்ட மாதிரிகளை, இரசாயன ஆயுதங்களை தடை செய்வதற்கான அமைப்பின் (ஓ.பி.சி. டபிள்யூ) ஆய்வகத்தில் சோதனை செய்ததில் சரீன் வாயு பயன்படுத்தப்பட்டிருப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்தனர்.

இதுதொடர்பில் ஓ.பி.சி. டபிள்யூவின் அதிகாரிகள் கூறுகையில்,

'சரீன்' வாயுவை பயன்படுத்தியிருப்பதை மறுக்க முடியாது. மேலும் 7 பேரிடம் இருந்து பெறப்பட்டுள்ள மாதிரிகள் இருவேறு ஆய்வகங்களில் சோதனை செய்யப்படவுள்ளன. இன்னும் பலரிடம் இருந்து மாதிரிகள் பெறப்பட்டு வருகின்றன'-என்றார். (எ)

## பெரும் பதற்றத்தின் மத்தியில் அமெ. — தென்கொரியா பயிற்சி

கொரிய தீபகற்பத்தில் ஏற்பட்டுள்ள பதற்றங்களுக்கு மத்தியில் அமெரிக்கா மற்றும் தென்கொரிய விமானப் படைகளின் கூட்டுப் பயிற்சி நேற்று இடம்பெற்றது.

கன்சன் விமானத் தளத்தில் நடைபெற்ற இந்தப் பயிற்சிகளில் சுமார் ஆயிரத்து 500 அமெரிக்க மற்றும் தென்கொரிய விமானப் படையினர் பங்கேற்றுள்ளனர்.

இதன்போது, போர்ச் சூழல்களில் ஒத்துழைப்புக்களை அதிகரிக்கும் முயற்சியில் எவ்-16, எவ்-15கே உள்ளடங்கலாக 80 விமானங்கள் இருதரப்பினர் மத்தியிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்தவாரஇறுதியில் கொரிய தீபகற்பத்தை நோக்கி அமெரிக்காதனது விமானப்படைத்தளத்தை திசை திருப்பிய நிலையில், வடகொரியா விரைவில் ஆறாவது அணுவாயுத சோதனையை நடத்தக் கூடும் என்ற அச்சம் தோன்றியுள்ளது. (எ)

# வெனிசுலா ஜனாதிபதிக்கு எதிராக திரண்டனர் லட்சக்கணக்கானோர்

## பொலிஸார் துப்பாக்கிச்சூடு; இருவர் உயிரிழப்பு



கராகஸ், ஏப்.21

வெனிசுலா ஜனாதிபதியை பதவி விலக வலியுறுத்தி நாடு முழுவதும் அவருக்கு எதிராக லட்சக் கணக்கான மக்கள் திரண்டு நேற்றும் நேற்று முன்தினமும் போராட்டம் நடத்தினர். இதன்போது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்தனர். இதனால் அங்கு கலவர சூழ்நிலை உருவாகியுள்ளது.

பெற்றோல் உற்பத்தியில் உலகில் முன்னணி நாடுகளில் ஒன்றாகத் திகழ்ந்து வரும் வெனிசுலா நாட்டில் நீண்ட காலமாக ரபேல் சாவஸ் ஜனாதிபதியாக இருந்து வந்தார். நாட்டின் மிகப் பெரிய தலைவராக திகழ்ந்துவந்த அவர், 2013 ஆம் ஆண்டு நோயால் மரணம் அடைந்தார். அவர் ஆட்சியில் இருந்த காலம் வரை நாட்டில் அமைதி நிலவி வந்தது.

அவர்மரணம் அடைந்ததும்நிக்கோலஸ் மாதுரோ ஜனாதிபதியானார். ஆனால், அவரால் ஆட்சியை சரியாக நடத்த முடியவில்லை.

எண்ணைவளம் மிக்க நாடாகஇருந்தாலும்பொருளாதாரத்தில் வெனிசுலா வீழ்ச்சியைச் சந்தித்தது. பண வீக்கம் பல மடங்கு அதிகரித்தது. எனவே,



இதனால் மக்கள் பொருள்களை வாங்க முடியாமல் தவிக்கின்றனர். அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்கவில்லை. விலைவாசி கட்டுப்பாடற்ற நிலை யில் உள்ளது.

எனவே, ஜனாதிபதிக்கு எதிராக எதிர்க்கட்சியினர் போராட்டம் நடத்தி வந்தனர். அவர்களில் பல தலைவர்களை ஜனாதிபதி கைது செய்துசிறையில்அடைத்தார்.


இந்த நிலையில் நேற்றுமுன்தினம் நாடு முழுவதும்ஜனாதிபதிக்கு எதிராக மக்கள் திரண்டு போராட்டம் நடத்தினார்கள்.

ஜனாதிபதிபதவிவிலக வேண்டும், உடனடியாக ஜனாதிபதித் தேர்தல் நடத்த வேண்டும், சிறையில் உள்ள எதிர்க் கட்சித் தலைவர்களைவிடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடைபெற்றது.

தலைநகரம் கராகஸ் மற்றொரு முக்கிய நகரமான சான்கிறிஸ்டோபல் ஆகியவை உள்ளிட்ட பெரும்பாலான நகரங்களில் மக்கள் வீதிகளில் திரண்டு போராட் டம் நடத்தினார்கள். இதில் லட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். அப்போது பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையேமோதல் ஏற்பட்டது. பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளைவீசியமையுடன் தடியடியும் நடத்தினார்கள்.

கராகஸ் மற்றும் சான் கிறிஸ்டோபலில் துப்பாக்கிச் சூடு நடைபெற்றது. இதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். அதேவேளை சான்கிறிஸ்டோபலில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

கராகஸ் நகரில் ஜனாதிபதி ஆதரவாளர்கள் திரண்டு போராட்டக்காரர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனால் இரு தரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்படும் நிலை உருவானது. பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்தியுள்ளனர். (எ)



# ரொனால்டோ 'ஹாட்ரிக்'

## அரையிறுதியில் ரியல் மாட்ரிட்!

மாட்ரிட், ஏப்.21

பேயர்ன் முனிக் அணிக்கு எதிரான சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டக் காலிறுதியில், ரொனால்டோ 'ஹாட்ரிக்' கோல் அடித்து கைகொடுக்க ரியல் மாட்ரிட் அணி 6-3 என வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஸ்பெயினில் உள்ள மாட்ரிட் நகரில், ரியல் மாட்ரிட், பேயர்ன் முனிக் அணிகள் மோதிய சம்பியன்ஸ் லீக் உதைபந்து (கிளப்) காலிறுதியின் 2 ஆவது சுற்றுப் போட்டி இடம்பெற்றது.

முதல் பாதி கோல் எதுவுமின்றி சமநிலையில் இருந்தது.

இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட பேயர்ன் முனிக் அணிக்கு 53 ஆவது நிமிடத்தில் கிடைத்த 'பெனால்டி' வாய்ப்பில் லெவான்டவ்ஸ்கி முதல் கோல் அடித்தார். இதற்கு, 76 ஆவது நிமிடத்தில் ரியல் மாட்ரிட் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ ஒரு கோல் அடித்து பதிலடி கொடுத்தார்.

பின், 77 ஆவது நிமிடத்தில் ரியல் மாட்ரிட் வீரர் செர்ஜியோ ரமோஸ் ஒரு 'சேம்சைட்' கோல் அடித்து ஏமாற்றினார்.

இரண்டாவது பாதியின் முடிவில் பேயர்ன் முனிக் அணி 2-1 என முன்னிலை வகித்திருந்தது.

ஏற்கனவே, நடந்த முதல் சுற்றில் ரியல் மாட்ரிட் அணி 2-1 என வெற்றி பெற்றிருந்தது. இதனையடுத்து போட்டி 3-3 என சமநிலை வகித்ததால், இரு அணிகளுக்கும் தலா 15 நிமிடம் கூடுதல் நேரம் வழங்கப்பட்டது.

தொடர்ந்து அசத்திய ரொனால்டோ, 104, 109 ஆவது நிமிடங்களில் தலா ஒரு கோல் அடித்து, 'ஹாட்ரிக்' சாதனை படைத்தார்.

பின், 112 ஆவது நிமிடத்தில் ரியல் மாட்ரிட் வீரர் மார்கோ அசன்சியோ, தன் பங்கிற்கு ஒரு கோல் அடித்தார்.

ஆட்டநேர முடிவில் ரியல் மாட்ரிட் அணி 6-3 என்ற கணக்கில் வெற்றி பெற்று, தொடர்ந்து 7 ஆவது முறையாக அரையிறுதிக்கு முன்னேறியது.

இதேவேளை, 'ஹாட்ரிக்' கோல் அடித்து அசத்திய ரியல் மாட்ரிட் அணியின் கிறிஸ்டியானோ ரொனால்டோ, சம்பியன்ஸ் லீக் கால்பந்து வரலாற்றில் 100 கோல் அடித்த முதல் வீரர் என்ற சாதனை படைத்தார்.

மான்செஸ்டர் யுனைடெட், ரியல் மாட்ரிட் அணிகளுக்காக விளையாடிய இவர், 137 போட்டிகளில் 100 கோல் அடித்துள்ளார். இவரை அடுத்து, பார்சிலோனா அணியின் மெஸ்சி (94 கோல்கள், 114 போட்டிகள்) உள்ளார்.

அத்துடன், சம்பியன்ஸ் லீக் அரங்கில் பேயர்ன் முனிக் அணிக்கு எதிராக அதிக கோல் (9 கோல்கள்) அடித்த வீரர் என்ற பெருமையையும் ரொனால்டோ பெற்றுள்ளார்.

சம்பியன்ஸ் லீக் தொடரில், குறிப்பிட்ட ஒரு அணிக்கு எதிராக அதிக கோல் (9) அடித்த வீரர்கள் பட்டியலில் பார்சிலோனா அணியின் மெஸ்சியுடன் இணைந்துள்ளார்.

மேலும், சம்பியன்ஸ் லீக் வரலாற்றில், பேயர்ன் முனிக் அணிக்கு எதிராக 'ஹாட்ரிக்' கோல் அடித்த 3 ஆவது வீரரானார் ரொனால்டோ. இதற்கு முன், மான்செஸ்டர் சிட்டி அணியின் செர்ஜியோ அகுரோ (2014 ஆம் ஆண்டு), டெபோர்டிவோ அணியின் ராய் மாகேய் (2002 ஆம் ஆண்டு) இச்சாதனை படைத்திருந்தனர்.

இதேவேளை, ரியல் மாட்ரிட் அணியின் ரொனால்டோ அடித்த 2, 3 ஆவது கோல், 'ஓவ்-சைட்' என பேயர்ன் முனிக் அணியினர் எதிர்ப்பு தெரிவித்தமையால் சர்ச்சை எழுந்தது.

# 'மத்தியஸ்தர் கடமையை செவ்வனே ஆற்றவில்லை'

## பேயர்ன் முனிக் பயிற்றுநர் அன்சிலொட்டி குறைகூறுகின்றார்



டுபாய், ஏப். 20

ரியல் மெட்றிட் கழகத்திற்கு எதிரான ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால் இறுதிப் போட்டியில் மத்தியஸ்தர் விக்டர் கசாய் தனது கடமையை செவ்வனே ஆற்றவில்லை என பேயர்ன் முனிக் அணி பயிற்றுநர் கார்லோ அன்சிலொட்டி குறைகூறியுள்ளார்.

உதைபந்தாட்டப் போட்டிகளில் உடனடியாக வீடியோ தொழில்நுட்பம் பயன்படுத்தப் படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மெட்றிட், சன்டியாகோ பெர்னபோ விளையாட்டரங்கில் கடந்த செவ்வாய் நள்ளிரவுக்கு சற்று பின்னர் நடைபெற்ற இரண்டாம் கட்ட கால் இறுதிப் போட்டியில் பயேன் மியூனிச் கழகத்தை 4 - 2 என்ற கோல்கள் அடிப்படையில் ரியல் மெட்றிட் கழகம் வெற்றி கொண்டது.

இந்த வெற்றியுடன் இரண்டு கட்டங்களிலும் 6 - 3 என்ற ஒட்டுமொத்த கோல்கள் அடிப்படையில் ரியல் மெட்றிட் வெற்றி பெற்று அரை இறுதியில் விளையாட தகுதிபெற்றுள்ளது. இப் போட்டியில் பேயர்ன் முனிக் மத்தியகள வீரர் ஆர்த்துரோ விட்டால் இரண்டு மஞ்சள் அட்டைகளுக்காக வெளியேற்றப் பட்டார்.

அத்துடன், கிறிஸ்டியோனோ ரொனால்டோ மேலதிக நேரத்தின்போது 'ஓவ் சைட்' நிலையிலிருந்து கோல் ஒன்றைப் போட்டார் என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பில் போட்டியின் பின்னர் பேயர்ன் முனிக் அணியின் பயிற்றுநர் கார்லோ அன்சிலொட்டி ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்-

''இந்தப் போட்டி தொடர்பாக நாங்கள் பல கோணங்களில் சகல விடயங்களையும் ஆராய்ந்தோம். ஆனால் மத்தியஸ்தரைப் பற்றி மாத்திரம் நாங்கள் சிந்திக்காமல் விட்டுவிட்டோம். உண்மையில் மத்தியஸ்தர் தனது கடமையை சிறப்பாக ஆற்றவில்லை .- என்றும் தெரிவித்துள்ளார்.

இத்தாலி நாட்டவரான அன்சிலொட்டி, ரியல் மெட்றிடின் முன்னாள் பயிற்றுநராவார்.


மேலும், மத்தியஸ்தர் தொடர்பான தனது ஆய்வு சரி என்பதை ரியல் மெட்றிட் பயிற்றுநர் ஸினேடின் ஸிடேன் ஒப்புக் கொண்டார் என்றும் அன்சிலொட்டி குறிப்பிட்டார்.

கோல் கோடு தொழில்நுட்பம் பிறீமியர் லீக் போட்டிகளில் 2013 இலும் பியூண்டெஸ்லீகாவில் 2015 இலும் அறிமுகப் படுத்தப்பட்டன.

தற்போது உலகம் முழுவதும் வீடியோ உதவி மத்தியஸ்தரின் ஒத்துழைப்பு பரீட்சார்த்தமாக பெறப்பட்டு வருகின்றது.

இந்த முறையை ரஷ்யா 2018 உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளின்போது அதனை முழுமையாகப் பயன்படுத்த பீபா தலைவர் ஜியானி இன்பன்டினோ விரும்புகின்றார்.

# டில்லி அணியை 15 ஓட்டங்களால் வீழ்த்தியது சன்ரைசர்ஸ் ஐதராபாத்!



ஐதராபாத், ஏப். 21

10 ஆவது ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற போட்டியில் டில்லி டேர் டெவில்ஸ் அணியை 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி சன்ரைசர்ஸ் ஐதராபாத் வெற்றி பெற்றுள்ளது.

நாயணச் சுழற்சியில் வென்ற ஐதராபாத் அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. அதன்படி தொடக்க வீரர்களாக அணித்தலைவர் வோர்னர் - தவான் களமிறங்கினர்.

7 பந்துகளில் 4 ஓட்டங்கள் எடுத்திருந்த போது கிறிஸ் மோரிஸ் வேகத்தில் வோர்னர் வெளியேறினார். இதையடுத்து தவானுடன் ஜோடி சேர்ந்தார் கேன் வில்லியம்சன். இருவரும் டில்லி பந்துவீச்சை சிதறடிக்க அணியின் ஓட்டப் பெறுமதி மளமளவென உயரத் தொடங்கியது.

இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்த ஐதராபாத் அணி 191 ஓட்டங்களைக் குவித்தது. அந்த அணியில் தவான் 70 ஓட்டங்களும், வில்லியம்சன் 89 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். டில்லி சார்பில் மோரிஸ் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதையடுத்து 192 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய டில்லி அணியின் தொடக்க வீரர்களாக களமிங்கிய சஞ்சு சாம்சன் - சாம் பில்லிங்ஸ் தொடக்கம் முதலே நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதில் சாம் பில்லிங்ஸ் 13 ஓட்டங்களில் வெளியேறினார். அவரைத்தொடர்ந்து களமிறங்கிய கருண் நாயர் சஞ்சு சாம்சனுடன் இணைந்து அதிரடி காட்ட அணியின் ஓட்ட வேகம் அதிகரித்தது.

சஞ்சு சாம்சன் 42 ஓட்டங்களுடனும், நாயர் 33 ஓட்டங்களுடனும் வெளியேற, பின்னர் ஸ்ரேயாஸ் ஐயர் - மத்தியூஸ் ஜோடி அதிரடி காட்டத் தொடங்கியது. எனினும் கடைசி ஓவருக்கு 23 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், 7 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்த சித்தார்த் கவுல் மத்தியூஸ் (31 ஓட்டங்கள்) விக்கெட்டையும் வீழ்த்தினார்.

இறுதியில் டில்லி அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 176 ஓட்டங்களை எடுத்தது. அந்த அணியில் ஸ்ரேயாஸ் ஐயர் 50 ஓட்டங்கள் எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

ஐதராபாத் அணியின் சார்பாக சிராஜ் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதையடுத்து ஐதராபாத் அணி 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

# 8 வாரக் கருவுடன் விளையாடி கோப்பையை வென்றார் செரினா!





நியூயோர்க், ஏப் 21

டென்னிஸ் வீராங்கனை செரினா வில்லியம்ஸ் 8 வாரக் கருவுடன், ஆஸ்திரேலிய ஓபன் தொடரில் பங்கேற்று கோப்பை வென்றுள்ளார் என்று தற்போது தெரியவந்துள்ளது.

அமெரிக்க டென்னிஸ் வீராங்கனை செரினா வில்லியம்ஸ் ( வயது 35). அடுத்த வாரம் வெளியாகவுள்ள டென்னிஸ் தரவரிசையில் மீண்டும் 'நம்பர்-1' இடத்தை பிடிக்கவுள்ளார்.

செரினாவுக்கும் ரெட்டிட் நிறுவனத்தின் உரிமையாளர் அலெக்ஸ் ஒஹானியன் கடந்த 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் திருமண நிச்சயதார்த்தம் இடம் பெற்றது.

இதன் பின் கடந்த ஜனவரி மாதம் ஆஸ்திரேலிய ஓபன் தொடரில் செரினா பங்கேற்றார். இறுதிப் போட்டியில் தனது சகோதரி வீனஸ் வில்லியம்ஸை வென்று, கிராண்ட்ஸ்லாம் அரங்கில் 23 ஆவது பட்டம் கைப்பற்றி, ஸ்டெபி கிராப் சாதனையை சமன் செய்தார்.

இதன் பின் முழங்கால் காயம் காரணமாக போட்டிகளில் பங்கேற்காமல் உள்ள செரினா வெளியிட்ட 'ஸ்னாப் ஷாட்' படத்தில், '20 வாரங்கள்' என தலைப்பிட்டிருந்தார்.

இதனால் செரினா கர்ப்பமாக இருக்கிறார் என செய்திகள் பரவின. உடனடியாக இப்படத்தை செரினா நீக்கி விட்டார். இதனிடையே, செரினாவின் லொஸ் ஏஞ்சல்ஸ் செய்தித் தொடர்பாளர் கெல்லி புஷ்நோவக் வெளியிட்ட செய்தியில்,

'செரினா தாயாகப் போவது உண்மை தான். இதை உறுதி செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்,' என, தெரிவித்தார்.

இதையடுத்து செரினா, 20 வாரங்கள் கர்ப்பமாக இருப்பது உறுதியாகிறது. அத்துடன், ஆஸ்திரேலிய ஓபன் தொடரின் போது, இவர் சுமார் 8 வார கருவுடன் இருந்துள்ளார். தொடர் நடந்த இரு வாரங்களிலும், வயிற்றில் இரண்டு மாத கருவை சுமந்து கொண்டு, களத்தில் கடுமையாக போராடி வெற்றி பெற்றுள்ளார் என இப்போது தெரியவந்துள்ளது.

செரினா தாயாக இருப்பதால் இந்த ஆண்டு எவ்வித போட்டிகளிலும் பங்கேற்க மாட்டார். அடுத்த ஆண்டு பிரெஞ்ச் ஓபன் தொடரில் ஒரு வேளை அவர் விளையாடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

# முத்தையா முரளிதரனுக்கு ஐ.சி.சியின் கௌரவ விருது!

துபாய், ஏப் 21

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் புகழ்பூத்தவர்கள் பட்டியலில் கடந்த வருடம் இணைத்துக் கொள்ளப்பட்ட முதலாவது இலங்கையரான முத்தையா முரளிதரன், சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின்போது சம்பிரதாயபூர்வமாக கௌரவிக்கப்படவுள்ளார்.

இதனை முன்னிட்டு ஐ.சி.சி புகழ்பூத்தவர்களுக்கான உத்தியோகபூர்வ நினைவுச் சின்னமான தொப்பி ஒன்று முத்தையா முரளிதரனுக்கு வழங்கப்படவுள்ளது.

இந்த நினைவுச் சின்னத்தைப் பெறுவதற்கு பங்களாதேஷுடனான தொடர், இந்திய கிரிக்கெட் விஜயம் அல்லது சம்பியன்ஸ் கிண்ணம் ஆகிய மூன்றில் ஒன்றைத் தெரிவு செய்யுமாறு முரளிதரனிடம் கோரப்பட்டிருந்தது.



அவர் சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியைத் தெரிவு செய்துள்ளார் என்று ஸ்ரீலங்கா கிரிக் கெட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஏஷ்லி டி சில்வா தெரிவித்தார்.

இதற்கு அமைய இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் லண்டன் ஓவல் மைதானத்தில் ஜூன் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ண லீக் கிரிக்கெட் போட்டியின்போது முரளிதரனுக்கு ஐ.சி.சி புகழ்பூத்தவர்கள் நினைவுச் சின்னமான தொப்பி சம்பிரதாயபூர்வமாக வழங்கப்படவுள்ளது.


முரளிதரனுக்கு இத்தகைய புகழ் கிடைப்பதானது எமது தேசத்திற்கு பெருமையைத் தருகின்றது என ஸ்ரீலங்கா கிரிக் கெட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஏஞ்லி டி சில்வா குறிப்பிட்டுள்ளார் என்று நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சதுரங்கப் போட்டி பிற்போடப்பட்டது!

யாழ்ப்பாணம், ஏப். 21

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் நாளை சானிக் கிழமையும், நாளை மறுதினமும் இடம்பெற விருந்த இளையோருக்கான சதுரங்கப் போட்டி பிற் போடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடத்தப்பட இருந்த இளையோருக்கான இந்த சதுரங்கச் சுற்றுப் போட்டிகள் கொழும்பில் நடைபெறும் சர்வதேச தரப்



படுத்தல் சதுரங்கப் போட்டியை முன்னிட்டு பிற்போடப்பட்டுள்ளது.

மீண்டும் இந்தப் போட்டி நடைபெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என இலங்கை சதுரங்க சம்மேளனம் அறிவித்துள்ளது.

காலைக்கதிர்



## சுயநலச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாணசபையின் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி ஒதுக்கீட்டில், வடக்குமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் இந்த முல்லைத்தீவு நகரப்பகுதியில் உள்ள கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திற்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள - இந்தவன்னிமண்ணை இறுதியாக ஆண்ட - தமிழ் மன்னன் மாவீரன் குலசேகரம் வயிரமுத்து பண்டாரவன்னியனின் உருவச் சிலையைத் திறந்து வைத்து உங்கள் முன் உரையாற்றுவதில் மகிழ்வடைகின்றேன்.

வன்னி இராச்சியத்தின் மாவீரனாக விளங்கிய பண்டாரவன்னியனின் திருவுருவச் சிலையை முல்லைத்தீவில் நிறுவ வேண்டும் என்ற தீராத அவாவில், பல முயற்சிகளை மேற்கொண்ட வடமாகாண சபையின் உறுப்பினர் துரைராஜா ரவிகரனின் நீண்டநாள் கனவும் இன்று நனவாகியுள்ளது.

தமிழர்களின் வீரம் செறிந்த வாழ்வியல் முறைமைகளை உலகுக்குப் பறைசாற்றிநிற்கும் வன்னி மண்ணின் இறுதித் தமிழ் மன்னனாக விளங்கிய மாவீரன் பண்டாரவன்னியனின் வரலாறு பற்றிய எமது இளம்சிறார்களும் ஏனையோர்களும் அறிந்திருத்தல் அவசியமாகும்.

பண்டார வன்னியன் 1777ஆம் ஆண்டில் பிறந்தார் எனவும் கூறப்படுகின்றது. 1771இல் பிறந்தார் எனவும் கூறப்படுகிறது. 1803ஆம் ஆண்டு உயிர்நீத்தார் எனவும் கூறப்படுகின்றது. அப்படியானால் அவர் 26 வருடங்களே வாழ்ந்தார் என்று கொள்ள வேண்டும் அல்லது 32 ஆண்டுகள் வாழ்ந்தார் என்று கொள்ளப்பட வேண்டும். அரசாங்கத்தால் பண்டாரவன்னியன் தினமாகப் பிரகடனப்படுத்தியிருக்கும் தினம் ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி.

வன்னியின் கடைசி மன்னனான பண்டாரவன்னியன் திருமணஞ் செய்தது தற்போது அநுராதபுர மாவட்டத்தினுள் அடங்கும் நுவரவாவியின் குமாரசிங்கமகாவன்னியனின் மகளை. அக்காலத்தில் நுவரவாவிப் பிரதேசம் தமிழர் வாழ் இடமாக இருந்தது.

என் பிள்ளைப் பராயத்தில் பழைய அநுராதபுர நகரத்தில் தமிழ் மக்கள் பெருவாரியாக வாழ்ந்துவந்தார்கள். 18 வருடங்கள் அநுராதபுரம் நகரசபையின் தலைவராக இருந்து வந்தவர் நடராஜா என்ற ஒரு தமிழரே.

முல்லைத்தீவைச் சேர்ந்த பண்டாரவன்னியன் தெற்கில் மணம்முடித்தமையால் வன்னியின் வடக்கிலும், தெற்கிலும் அவன் ஆதிக்கம் பரவியிருந்தது.

1621இல் போர்த்துக்கீசர்கள் இலங்கையின் கரையோரங்களைக் கைப்பற்றிய பின்னர், வன்னி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கு முயன்றபோதும் அவர்களின் ஆட்சி முடிவுக்கு வரும்வரை வன்னி இராச்சியத்தை அவர்களால் கைப்பற்ற முடியவில்லை.

வன்னியர் என்ற சொல் 'வன்மை' என்ற தமிழ்ச் சொல்லில் இருந்து தோன்றியதாகக் கருதப்படுகின்றது. வன்மை என்ற சொல்லுக்கு 'வலிமை நிறைந்த' என்பதுபொருளாகும். வன்னியர் என்னும் சொல்லுக்கு நெருப்பில் இருந்து பிறந்தவர்கள் என்றும் வன்னி மரங்கள் அடர்ந்த பகுதிகளில் ஆட்சி செய்தவர்கள் என்றும் இரு வேறு விதமான கருத்துக்கள் நிலவுகின்றன. வன்னி என்ற சொல்நெருப்பையும் குறிக்கும்.

எனினும், 1882ஆம் ஆண்டில் ஒல்லாந்தர்கள் இலங்கையைக் கைப்பற்றிய பின்னர், முதன்முதலாக வன்னி இராச்சியம் அவர் களின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது.

இப்போர் பற்றி லூயி என்ற வரலாற்று ஆசிரியர் *"ஒல்லாந்தர்கள் உலகில் எத்தனையோ நாடுகளுடன் போர் தொடுத்திருக்கின்றார்கள். எனினும், இலங்கையில் தமிழ் மன்னர்களுடன் மேற்கொண்ட போர் அவர்களுக்கு தமிழனின் வீரம் செறிந்தபோர்த்தந்திரத்தையும், மன உறுதியையும் வியந்து போற்ற வைத்தது"* எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதன் பின்னர் ஆட்சியைக் கைப்பற்றிய வெள்ளையர்கள் இலங்கையின் அனைத்துப் பாகங்களையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த போதும், வன்னிஅரசைத்தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்குப் பல தந்திரங்களைக் கையாள வேண்டியிருந்தது.

சோழப் பேரரசின் வழிவந்த பண்டாரவன்னியன், வெள்ளையர்களால் அமைக்கப்பட்ட முல்லைத்தீவு கோட்டையை தகர்த்தெறிந்து வன்னி இராச்சியத்தை கைப்பற்றியதுடன் மட்டும்நின்றுவிடாது; ஆங்கிலப் படைகள் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற முயற்சித்த போது கண்டிய மன்னனுடன் இணைந்து ஆங்கிலேயருக்கு எதிராகப்பெரும்போர்தொடுத்து ஆங்கிலேயர்களைப் புறமுதுகிட்டோடச் செய்தான்.

திரும்பவும்ஆங்கிலேயர்கள் வன்னிப் பெருநிலப்பரப்பில் போர்தொடுப்பதற்கு முன்பதாக வன்னி இராச்சியத்தின் மன்னனாக விளங்கிய மாவீரன் பண்டாரவன்னியனுடன் ஒரு சமாதான ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, அவனுடன் நெருங்கிப்பழகி வன்னி இராச்சியத்தைக் கைப்பற்ற மேற்கொண்ட முயற்சிகள் பண்டாரவன்னியனால் ஏற்றுக்கொள்ளப்படாதபோதும், அவனின் அருமைத் தம்பியர்களான கைலாயவன்னியனதும், பெரியமெயினாரினதும் வற்புறுத்தலின்பெயரில் ஆங்கிலேயர்களுடன் பேச்சு நடத்துவதற்காக யாழ்ப்பாணக் கோட்டைக்கு சென்றிருந்தான்.

அங்கே பண்டாரவன்னியனுக்குப் பிரமாதமான வரவேற்புக்கள் வழங்கப்பட்டன. எப்படியாவது பண்டாரவன்னியனைத் தமது ஆட்சிக்குள் அடக்கிவிட வேண்டும் என்ற முனைப்பில் ஆங்கிலேயத்தளபதிகள் முயன்றனர். இவ்வாறான பொறிமுறைகள் இப்போது எம் அரசாங்கங்களாலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. 'வா' என்று அழைப்பார்கள். போனால் குடிக்கத் தருவார்கள், சாப்பிடத் தருவார்கள். ஆனால், உரித்துக்களைத் தரமாட்டார்கள்!

எனினும், அஞ்சாநெஞ்சன் மாவீரன் பண்டாரவன்னியன் அவர்களின்கோரிக்கைகளைத் தூக்கி எறிந்து போருக்கு தயாரானான்.

பண்டாரவன்னியனுடன் நேருக்கு நேர் போர் புரிந்து அவனை வெல்ல முடியாது என்பதை நன்கு அறிந்த ஆங்கிலேயப் படைகள், வன்னி இராச்சியத்தின் சிற்றரசனாக விளங்கிய காக்கை வன்னியனின் உதவியுடன் பண்டாரவன்னியன் போர்ப்பாசறையில் தனித்திருந்த போது அவனை தந்திரமாக ஒட்டுசுட்டான் வரை கூட்டிச் சென்று வெள்ளையர்களின் இராணுவத் தளபதி வொன் டிறிபேர்க் மூலம் கைதுசெய்து, விசாரணைஎன்றபோர்வையில் சுட்டுக் கொன்றார்கள் என்று கூறப்படுகின்றது.

வன்னியைச் சேர்ந்த எமது சுகாதார அமைச்சர் வைத்தியர் சத்தியலிங்கம் காக்கை வன்னியன் ஒரு கற்பனைப் பாத்திரமே என்று எங்கோ கூறியிருந்தார். ஆனால், காக்கை வன்னியன் போன்ற கதாபாத்திரங்கள் இன்றும் எம்மிடையே வாழ்கின்றார்கள் என்பதை அவர் ஒப்புக் கொள்வார் என்று நம்புகின்றேன்.

பண்டாரவன்னியன் தனது இறுதி மூச்சு இருக்கும் வரை ஆங்கிலேயப் படைகளுக்கு அஞ்சாது பெருவீரனாக வன்னி இராச்சியத்தை ஆண்ட இறுதித் தமிழ் மன்னன் என்ற பெயருடன் உயிர்நீத்தான்.

பண்டாரவன்னியனின் வரலாறு எம் அனைவருக்கும் புத்துணர்வையும் நம்பிக்கையையும் தரவல்லது. நேர் சிந்தனையுடன் நிமிர்ந்து நடந்து வாழ்க்கையை எதிர் கொண்ட மாவீரன் அவன். அவனின் வாழ்க்கை உத்தியோகபூர்வமாக எழுதப்பட வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டது.

சரித்திர ஆசிரியர்களையும் வன்னி பற்றிய அறிவு படைத்த அறிவாளிகளையும் கொண்ட ஒரு குழுவை அமைத்து சகல செய்தித்தரவுகளையும் அறிந்த பின், ஒருநூலைவெளியிடலாம் என்று நினைக்கின்றேன்.

பத்திரிகையில் வேண்டுமெனில் அறிக்கை விடுத்து தகவல்கள் அறிந்தவர்கள் அவற்றை அந்த குழுவின் கவனத்திற்குக் கொண்டுவருமாறுகோரலாம். இவற்றிற்கான செலவை எமது பண்பாட்டலுவல்கள் அமைச்சர் எமக்குத்தந்துதவுவார்என்றுநம்புகின்றேன்.

தோல்விகள் நிரந்தரமானவை அல்ல. அதே போன்று வெற்றி வாகை சூடியவர்களும் தொடர்ந்துவெற்றியாளர்களாக மிளிர முடியாது என்பதற்குப் பண்டாரவன்னியனின் வரலாறு ஒரு சிறந்த சான்றாகும்.

வன்னி இறுதி யுத்தத்தின் போது மறைந்த பல்லாயிரக் கணக்கான மக்களின் உணர்வுகளை ஒன்று திரட்டி இன்று பண்டாரவன்னியனின் உருவத்தில் இங்கு சிலையாக வடித்திருக்கின்றோம். தமிழர்களின் வீரம் செறிந்த வரலாறுகளையும், அவர்களின் யார்க்கும் அஞ்சா மனோதிடத்தையும் இந்தச் சிலை என்றென்றும் உலகுக்குப் பறை சாற்றிக் கொண்டிருக்கும். அதை வடித்த தம்பி பால முருகனுக்கு எமது பாராட்டுக்கள்.

இன்று எமது மக்கள் சொல்லொண்ணாத் துயரங்களில் வாடுகின்றார்கள். உறவுகளை இழந்தவர்கள், உடமைகளை இழந்தவர்கள், இருப்பிடங்களை இழந்தவர்கள், நிலபுலன்களை இழந்தவர்கள் எனப் பல்லாயிரக்கணக்கான மக்கள் துன்பச்சுமைகளுடன்வாழுகின்றார்கள். இவர்களின் துன்பங்களை எவ்வாறு துடைக்க முடியும் அல்லது இவர்களுக்குஎந்த வகையில் எம்மால் உதவிகளை அல்லது ஒத்தாசைகளை வழங்க முடியும் என நாம் யாவரும் அல்லும் பகலும் செய்வதறியாது சிந்தித்த வண்ணம் உள்ளோம்.

இந்தத் தருணத்தில் எமது வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமையுடன் எமது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நாம் முன்வர வேண்டும். காக்கை வன்னியன் போல் சுயநலசிந்தனையுடன் சதிவேலைகளில் எம்மில் சிலர் ஈடுபடுவது முழுத்தமிழர் சமுதாயத்தையும் அழித்து விடும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

இன்றைய இந்தப் புனித தினத்தில் - பண்டாரவன்னியனின் சிலை அவனின் வீரப் பிரதாபங்களை மக்கள் மனதில் சுடர் விட்டு எரிய விட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் - வடக்கு, கிழக்கு மாகாணத்தமிழ் பேசும் மக்கள் யாவரும் ஒன்றிணைந்து எமது உரிமைகளுக்காகப் போராடுவோம் என்று உறுதி கூறுகிறேன். - என்றார்.

## அமைச்சரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"பொறுத்திருந்துபாருங்கள். வெசாக்கிற்கு முன்பாகப் பல மாற்றங்கள் இடம்பெறுகின்றமையை நீங்கள் பார்க்கத் தானே போகின்றீர்கள்?'' - என்று சிரித்துக் கொண்டு பதிலளித்தார் ஜனாதிபதி. (உ)

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரியர்களை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடிய சமயமே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசமைப்பு விவகாரம் தொடர்பில் அரசமைப்புச் சபையாக நாடாளுமன்றம் மீண்டும் அடுத்த மாதம் கூடவிருக்கின்றது.

அரசமைப்பு வழிகாட்டல் குழு உத்தேச அரசமைப்புத் தொடர்பில் இடைக்கால அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளது. அடுத்த இரண்டு வார காலத்தில் அது அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படும். அதன் பின்னர் அந்த இடைக்கால அறிக்கை விவரங்களின் அடிப்படையில் தீர்மானங்கள் எடுக்கப்படும். - என்றார் அவர். (உ)

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறினார் ஜனாதிபதி.

முக்கிய அரச நிறுவனங்கள், திணைக்களங்களின் தலைமைப் பதவிகளில் அதிரடி மாற்றங்களை ஏற்படுத்த ஜனாதிபதி தயாராகி வருகின்றார் என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

குறிப்பாக முக்கிய அமைச்சுக்களின் செயலாளர்கள் மாற்றப்படுவார்கள் எனத் தெரிகின்றது. (உ)

## எதிர்ப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியுள்ளனர்.

கொழும்பு நகரில் சேகரிக்கப்படும் குப்பைகளை தொம்பே பிரதேசத்தில் கொட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதேச வாசிகள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக ஹங்வெல்ல, கிரிந்திவெல பிரதான வீதியின் போக்குவரத்துக்கும் பாதிப்புஏற்பட்டிருந்தது.

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணாமற்போனோர் தொடர்பாகச் செய்யப்படும் முறைப்பாடுகள் சம்பந்தமாகச் சரியான தகவல்கள் வழங்கப்படும். இது விடயத்தில் முன்னைய ஆணைக்குழு அறிக்கைகளில் செய்யப்பட்டுள்ள பரிந்துரைகளைக் கருத்திற் கொண்டு விசேட செயற்றிட்டம் ஒன்றுதயாரிக்கப்படும் என்றும் அவர் சொன்னார். (உ)

## சுன்னாகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்களே இந்தப் பெற்றோல்குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

பெற்றோல் குண்டு பாரிய சத்தத்துடன் வெடித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் வைத்தியரின் தந்தை வயிற்றுப் பகுதியில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் சம்பவம் நடைபெற்ற சந்தர்ப்பத்தில் வைத்தியர் வீட்டில் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வைத்தியர் மருதனார்மடம் பகுதியில் தனியார் வைத்தியசாலை ஒன்றைநடத்தி வந்துள்ளார்.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் குறித்து எந்தத் தகவலும் தெரியவராத நிலையில், சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளைத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர்.

## குப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நேற்று நள்ளிரவு 12 மணியிலிருந்து நடைமுறைக்கு வரக்கூடியதாக இந்தப் பிரகடனம் அமைந்துள்ளது.

கழிவகற்றல் பணிகளுக்குக் குந்தகம் விளைவிப்போர் தொடர்பில் கடும் நடவடிக்கை எடுப்பதற்கு இந்தப் பிரகடனம் வழி செய்துள்ளது. (உ)

## குப்பைமேடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழு நியமிக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அரச நிறுவனங்களுக்கு இடையிலான கயிறு இழுப்பே குப்பை விவகார இழுபறிக்குக் காரணம் என்று கூறியுள்ள ஜனாதிபதி, மேற்படி நிலைமை ஏற்படக் காரணமான விடயங்களைத் தாம் நியமிக்கும் குழு கண்டறியும் என்றும் கூறினார். (உ)

## பாதுகாப்பற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ந.ஜீவன் (வயது - 43) என்பவரே பலியானவராவார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற கடுகதி ரயில் நேற்று மதியம் 12.30 மணியளவில் கொக்குவெளியில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையைக் கடக்க முற்பட்ட மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியது.

இவ்விபத்தில் சிக்கிய மோட்டார்சைக்கிள், சுமார் ஒன்றரைக் கிலோமீற்றர் தூரத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டது. அதன் பாகங்கள் ரயில் பாதையில் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவரான உயிரிழந்த நபரின் உடல் மோசமாகச் சேதமடைந்திருந்தது. அவரது சடலத்தையும் ரயில் சுமார் ஒரு கிலோமீற்றர் தூரம் வரை இழுத்துச் சென்றிருந்தது எனக் கூறப்படுகின்றது.

இவ்விபத்துத் தொடர்பாக வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (ம-100)

# அனைத்துலக இரண்டாவது சைவமாநாடு இன்று யாழ்.பல்கலையில் ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம்,ஏப்.21

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை நடத்தும் இரண்டாவது அனைத்துலகச் சைவ மாநாடு இன்று வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக் கழகத்தில் ஆரம்பமாகவுள்ளது என்று யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் 21ஆம், 22ஆம், 23ஆம் திகதிகளில் இந்தமாநாடு நடைபெறவுள்ளது.

இந்த சைவமாநாட்டின் கருப்பொருள் சைவசித்தாந்த மேன்மைகளும் இலங்கையரின் பங்களிப்பும் என்பதாகும்.

இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா. வேதநாதன் தலைமையில் ஆரம்பமாகவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக் கழகக் கலைப் பீடாதிபதி கலாநிதி க. சுதாகர், யாழ். இந்திய உதவி உயர் ஸ்தானிகர் ஆர். நடராஜன், திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்தப் பேராசிரியர் முனைவர் வீ. ஜெயபால் ஆகியோரும் கலந்து கொள்வர்.

ஆதார சுருதி உரைஞராக சென்னைப் பல்கலைக் கழக சைவ சித்தாந்தத் துறை மேனாள் பேராசிரியர் முனைவர் எஸ்.பி. சபாரத்தினம் கலந்து கொள்வர்.

நிகழ்வில் ஆசியுரைகளை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தப் பரமாச்சாரிய சுவாமிகள், இணுவில் தர்ம சாஸ்தா குருபீட முதல்வர் சிவஸ்ரீ தாணு மகாதேவக்குருக்கள், யாழ். பல்கலைக்கழக கலைப் பீட மேனாள் பீடாதிபதி தகைசார் பேராசிரியர் ப. கோபால கிருஷ்ண ஐயர், சிவஸ்ரீ சோ.இ.பிரணதர்த்திஹரக் குருக்கள் ஆகியோர் வழங்குவர்.

வாழ்த்துரைகளை பேராசிரியர்சி.க.சிற்றம்பலம், கொழும்பு அகில இலங்கை இந்துமாமன்றச் செயலாளர் வே. கந்தசாமி ஆகியோர் நிகழ்த்துவர்.

இந்த ஆய்வு மாநாட்டுக்கு 131 ஆய்வுக் கட்டுரைகள் சைவசித்தாந்த மேன்மைகள் பற்றியும், இலங்கையரின் சைவசித்தாந்தப் பங்களிப்புப் பற்றியும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மொத்தம் நான்கு சமகால அமர்வுகளில் 24 அரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகள் இந்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட இருக்கின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பெருமையை உலகுக்கு வெளிப்படுத்துவதாகவும் இந்த மாநாடு நிச்சயம் உதவும் என்றும் இந்த மாநாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் மட்டுமன்றி தென்கிழக்கு, கிழக்கு, பேராதனை, சப்ரகமுவ ஆகிய பல்கலைக்கழகங்களின் ஆய்வாளர்களும், மாணவர்களும், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, தேசிய கல்வி நிறுவன விரிவுரையாளர்களும் மாணவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர் என்றும் இந்தியாவிலிருந்தும் பல பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்துறையினர் முதலாவது அனைத்துலகச் சைவ மாநாட்டை 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆம், 13ஆம், 14ஆம் திகதிகளில் கைலாசபதி கலையரங்கில் நிகழ்த்தியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## விசாகப்பட்டிண விபத்தில் இலங்கையர் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப்.21

இந்தியா விசாகப்பட்டிணம் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது என அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசாகப்பட்டிணம் பகுதியில் வீதியோரத்தில் உள்ள விடுதி ஒன்றில் லொறி ஒன்று மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் இலங்கையர் உள்ளிட்ட நால்வர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். மூவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து இடம்பெறும் போது பேருந்துக்காக காத்திருந்த நால்வரே உயிரிழந்துள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது.

உயிரிழந்தவர்களின் சடலங்களைப் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தி அவர்களின் குடும்பங்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்துள்ளன. (ஐ)

## வட்டுவாகல், கேப்பாபிலவு மக்களுடன் கஜேந்திரகுமார் இணைந்து போராட்டம்

முல்லைத்தீவு, ஏப்.21

வட்டுவாகல் காணி விடுவிப்புக்கான போராட்டத்திலும் கேப்பாபிலவுப் போராட்டத்திலும் ஈடுபட்டுள்ள மக்களுடன் கஜேந்திரகுமாரும் இணைந்து கொண்டார்.

முல்லைத்தீவு மாவட்டம் முள்ளிவாய்க்காலை அண்டிய வட்டுவாகல் பகுதி இலங்கை ஆயுதப்படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பொது மக்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவிக்கக் கோரி மக்களால் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொடர் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்து கொண்டு ஆதரவு வழங்கியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து கேப்பாபிலவுக்குச் சென்று அங்கு தொடர்ச்சியாக காணி விடுவிப்புக்காகப் போராடிவரும் மக்களுடன் இணைந்து அவர்களது போராட்டத்துக்கு வலுச் சேர்த்தார். (ஐ-70)



### காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதுபோல்

## காணாமல் ஆக்கப்பட்டுள்ளோர் பிரச்சினைக்கும் தீர்வு தாருங்கள்

### இரண்டு மாதங்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவுகள் கோரிக்கை




கிளிநொச்சி, ஏப்.21

காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதேபோல் காணாமல் ஆக்கப்பட்டுள்ளோர் பிரச்சினைக்கும் தீர்வு பெற்றுத் தாருங்கள் என்று இரண்டு மாதங்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டுள்ளவர்களது உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி அவர்களின் உறவுகள் தமிழர் தாயகமான வடக்கிலும், கிழக்கிலும் தொடர் போராட்டங்களை முன்னெடுக்கின்றனர்.

அந்தப் போராட்டங்கள் இரு மாதங்களை எட்டியுள்ள நிலையில் இதுவரை எந்தவிதமான தீர்வுகளும் வழங்கப்படவில்லை.

இராணுவம் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிப்பதற்காக நடத்தப்படும் போராட்டங்களைக் கவனத்தில் கொண்டு அவற்றைத் தீர்க்க முயல்பவர்கள், எங்கள் பிரச்சினைகளை அரசிடம் கூறித் தீர்வைப் பெற்றுத்தர முயற்சிக்கவில்லை.

கிளிநொச்சியில் 60 ஆவது நாளாகவும், வவுனியாவில் 56 ஆவது நாளாகவும், முல்லைத்தீவில் 42 ஆவது நாளாகவும், மருதங்கேணியில் 37 ஆவது நாளாகவும், திருகோணமலையில் 47 ஆவது நாளாகவும் என்று போராட்டங்கள் இன்றும் தொடர்கின்றன.

இந்த நிலையில் எங்களை அனைவரும் கைவிட்டுள்ளனர். பல்வேறு நெருக்கடிகளுக்கும் மத்தியில் எங்களின் உறவுகளுக்காக அவர்கள் தொடர்பில் தீர்க்கமான முடிவை எதிர்பார்த்து கவனவீர்ப்பை ஆரம்பித்தபோதும் இந்த போராட்டத்தை எவரும் கண்டுகொள்ள வில்லை.

### கிளிநொச்சியில் கதவடைப்பு

எதிர்வரும் 27 ஆம் திகதி கிளிநொச்சியில் முழு கதவடைப்புப் போராட்டத்தை நடத்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் உள்ள வர்த்தக சங்கங்கள், பொது அமைப்புக்கள், போக்குவரத்துச் சங்கங்கள், சிவில் சமூகஅமைப்புகள், அரசியல் தரப்புக்கள் என்று அனைவரும் ஒன்றிணைந்து எங்களது போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் ஒத்துழைப்பு வழங்குங்கள்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் நல்ல தீர்வைப் பெற்றுக்கொள்ள வலுச் சேருங்கள்.-என்றும் தெரிவித்துள்ளனர். (ஐ-70)

## சைவப் புலவர் பரீட்சைகள் இன்று ஆரம்பம்

சுன்னாகம், ஏப்.21

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான சைவப் புலவர் மற்றும் இளஞ் சைவப் புலவர் பரீட்சைகள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ,பொலன்னறுவை, கொழும்பு ,லண்டன் ஆகிய இடங்களில் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்திலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆனைப்பந்தி பெண்கள் மகா வித்தியாலயத்திலும், பொலன்னறுவை மாவட்டத்தில் அன்னை சாரதாதேவி அறநெறிப் பாடசாலையிலும் இடம்பெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை ஒரு மணி தொடக்கம் 4 மணிவரை சாத்திரம் பாடநெறியும் நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை இலக்கியமும் பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 4 மணி வரை வரலாறு பாடநெறிகளும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் ஒரு மணி வரை இலக்கணமும் ஒரு மணி தொடக்கம் 4 மணி வரை உரைநடை பாடநெறிகளும் நடைபெறும்.

பரீட்சைக்கு விண்ணப்பித்து தகுதியுடைய பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று அகில இலங்கை சைவப்புலவர் சங்க தேர்வுச் செயலாளர் சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் அறிவித்துள்ளார். (ஐ-54)

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின்

# கிளிநொச்சிப் போராட்டம் 60 ஆம் நாளைத் தாண்டியது!

## 27 ஆம் திகதி முழுக் கடையடைப்பு




கிளிநொச்சி, ஏப்.21

தமது உறவுகளின் விடுதலையை வலியுறுத்தி, கிளிநொச்சியில் எதிர்வரும் 27 ஆம் திகதி பாரிய கடையடைப்பு போராட்டமொன்றைத் தாங்கள் முன்னெடுக்கவுள்ளனர் எனக் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

தமது போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும்வகையில்கிளிநொச்சி மாவட்டம் முழுவதிலும் உள்ள வர்த்தக நிலையங்கள், பொது நிறுவனங்கள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் அனைத்தும் ஒத்துழைப்பு. வழங்கவேண்டும்என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று டன் 60 ஆவது நாளை எட்டியுள்ளது.

இந்தப்போராட்டத்தில்கலந்து கொண்டிருந்த தாயொருவர் கருத்துத் தெரிவிக்கையில்: –

“எமதுபோராட்டம்ஆரம்பிக்கப்பட்டு இரண்டு மாதங்களாகியுள்ள போதிலும், எமது கோரிக்கைகளை யாருமே கவனத்தில் கொள்ளாத நிலையில், நாம் தெருவோரம் அநாதைகளாகக் கிடக்கின்றோம்.

“இங்கு எமது போராட்டம் நடைபெறும் இடத்துக்கு வரும் தலைவர்கள், போராட்டத்தில் ஈடுபட்டு வரும் எம்மை வெறும் காட்சிப் பொருளாகப் பார்த்து செல்கின்றனரே தவிர, எமது வேதனைகளையும், கண்ணீரையும் துடைத்துத் தீர்வைப் பெற்றுத் தருபவர்களாக இல்லை.

“எமக்கு உரிய தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் நாம் போராடி வந்தோம். எனினும், இதுவரை தீர்வு எட்டப்படாத நிலையில், புதியவடிவில் போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம்.”–என்றார்.




# காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் அரசின் மௌனத்திற்கு காரணம் கூறுகிறார் முதல்வர்



காணாமல் ஆக்கப்பட்டவர்களை நாங்கள்தான் பிடித்தோம், இன்ன இடத்தில் வைத்திருக்கின்றோம்அல்லதுகொன்றுவிட்டோம் என்பதை வெளிப்படையாகக் கூறினால் பெரும் சிக்கல் ஏற்படும் என்பதால்தான் அரசு இந்த விடயத்தில் பெரும் அமைதியைக் கடைப்பிடிக்கின்றது என வடக்கு முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

காணாமற்போனோர் விடயத்தில் அரசின் தற்போதைய நிலைப்பாட்டைக் கடுமையாக விமர்சித்த முதலமைச்சர், தூங்குபவனைஎழுப்பமுடியும்.ஆனால், தூங்குபவனைப் போல நடிப்பவனை எழுப்ப முடியாது என்றார்.

காணாமல்ஆக்கப்பட்டோரின் உறவுகள்முல்லைத்தீவுமாவட்டச் செயலகத்திற்கு முன்பாககூடாரம் அமைத்து முன்னெடுத்துவரும் போராட்டம் நேற்று 44 ஆவது நாளாகவும் இடம்பெற்றது.

நேற்றைய தினம் நேரடியாக அங்கு சென்ற முதலமைச்சர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். தமது உறவினர்கள்எப்போது, எப்படிக் கடத்தப்பட்டார்கள் என்பது தொடர்பான பல்வேறு தகவல்களைகாணாமற்போனோரின் உறவுகள் முதலமைச்சரிடம் தெரிவித்தனர்.

இதன் பின்னர் அங்கு கருத்து தெரிவிக்கையிலேயேமுதலமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு மேலும் கருத்துரைத்த அவர் –

“நீங்கள் கூறிய கருத்துக்கள் மிகவும் பயனுடையவை. வெறுமனே காணமல்போனார் என்று கூறாமல், அவர்கள் காணாமற்போன பின்னர், அல்லது படையினரிடம் கையளிக்கப்பட்ட பின்னர் இந்த இடத்தில் கண்டோம், அந்த இடத்தில் கண்டோம் என்றெல்லாம் ஆதாரபூர்வமான கருத்துக்களை நீங்கள் கூறியிருக்கின்றீர்கள். இவை பயனுடையவையாக அமையும். இவற்றை எழுத்து மூலம் தாருங்கள்.

காணாமற்போனோர் தொடர்பாக அரசு விசாரணை மேற்கொண்டால் எங்களுக்கு பிரச்சினை இல்லை. ஆனால், விசாரணைநடத்துவோம்,நடத்துவோம் என்று கூறி அரசு காலத்தைக் கடத்துகின்றது. அதற்குக் காரணம், அவர்கள் (காணாமற்போகச் செய்தவர்கள்) எங்கள் ஆக்கள். அவர்களைக் காட்டிக் கொடுக்கக்கூடாது என்பதே தெற்கில் உள்ள அரசியல்வாதிகளின் நிலைப்பாடு. இதுவே இந்த அமைதிக்குக் காரணம்.

ஆனால், அரசுக்கு தொடர் அழுத்தங்களைக் கொடுப்பதால் தான் இதைச் செய்ய முடியும். அதைத்தான் நாங்கள் இப்போது செய்துவருகின்றோம். – என்றார். (ம-8)

கேப்பாபிலவு நில மீட்பு

# தொடர்ந்து போராட முதல்வர் நேரில் சென்று கோரிக்கை





முல்லைத்தீவு – கேப்பாபிலவில் நிலம் மீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களை நேற்றுச் சந்தித்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன், போராட்டத்தின் மூலமே தீர்வைப் பெறமுடியும் என்பதால் அவர்களைத் தொடர்ந்து போராடுமாறு கேட்டுக்கொண்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அடுத்த மாதம் 17 ஆம் திகதி தம்மைச் சந்திக்க நேரம் தந்திருக்கின்றார் எனக் கூறிய வடக்கு முதலமைச்சர், அந்தச் சந்திப்பின்போது முக்கியமாக, நிலம்விடுவிப்புமற்றும்காணாமற்போனோரின் பிரச்சினைகள் தொடர்பாக அவருடன் தாம் கலந்துரையாடவுள்ளார்எனவும் கூறினார்.

கேப்பாபிலவில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்களை விடுவிக்கக் கோரி மக்கள் ஆரம்பித்த போராட்டம் நேற்று 51 ஆவது நாளாகத் தொடர்ந்தது. மக்களின் போராட்டக் களத்திற்கு நேற்று நேரில் சென்ற வடக்கு முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

# இடிதாங்கியை அபகரித்தோர் சிக்கினர்

கொழும்பு –நாரஹென்பிட்டியில் சுத்தப்படுத்தும் நிலையம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த இடிதாங்கியை (மின்னல்கடத்தி) அபகரித்தனர் என்ற சந்தேகத்தில் இராணுவத்தினர் உட்பட 9 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பல கோடி ரூபா பெறுமதியான இந்த இடிதாங்கியை அபகரித்தவர்கள் என்று கூறப்படும் இரண்டு இராணுவத்தினர், நான்கு வர்த்தகர்கள் உட்பட 9 பேரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் ஜெயராம் ட்ராக்சி நேற்று உத்தரவிட்டுள்ளார்.

மேலும், 9சந்தேகநபர்களில் 8 பேரை எதிர்வரும் 24 ஆம் திகதி அடையாளம் காணும் அணி வகுப்பில் நிறுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# “தடுமாறும் தலைமைகளால் தளர்வடைகிறார்களா மக்கள்?”

## வவுனியாவில் நாளை கருத்தாடல்

வவுனியா, ஏப். 21

“தடுமாறும்தலைமைகளால் தளர்வடைகிறார்களா தமிழ் மக்கள்? அடுத்து என்ன?” என்ற தலைப்பில் மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள கருத்தாடல் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா நகர விருந்தினர் விடுதியில் நடைபெறவுள்ளது.

துறைசார்ந்த நிபுணத்துவம் உடையவர்கள்கலந்துகொண்டு பிரதானமாக ஐந்து தலைப்புக்களில் கருத்தாடலில் ஈடுபடுவர்.

குறிப்பாக ஆட்சி மாற்றத்திற்குப் பின்னர் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் சவால்கள், புதிய அரசமைப்பு, மனித உரிமைகள் ஆணையகத்தின் இரண்டு ஆண்டு காலக்கெடு, நில விடுவிப்புப் போராட்டம், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டம் போன்றவற்றின் அடுத்த கட்டம்என்னஎன்பதுதொடர்பாக ஆராயப்படும்.

இதில் ஆர்வமுள்ள எவரும் கலந்துகொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 ... 6728 கே.கே.எஸ் வீதியிலுள்ள ... அச்சகத்தில் 21.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.